# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆகஸ்ட் - 2024

தனிப்பிரதி ரூ.20



# "எம்.ஆர்.அப்பன் ஓர் துருவ நட்சத்திரம்"

# 2024 ஒன்றிய பட்ஜெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்




































# அரசு ஊழியர்

**மாத இதழ்**


**2024 ஆகஸ்ட்**

**மலர்:45** **இதழ்:8**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.


இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **போராட்டங்கள் தொடரும்! வீறுகொண்டு எழும்**
   தலையங்கம் ........................................4
2. **2024 ஒன்றிய அரசின் பட்ஜெட் நடுத்தர ஏழை மக்களை ஏமாற்றும் பட்ஜெட்**
   பொதுச் செயலாளர் மேசையிலிருந்து ..................................5
3. **எம்.ஆர்.அப்பன் ஓர் துருவ நட்சத்திரம்** ......,,,,,,,,,,...............11
4. **திரிகளின்றி தீ மூட்டிய உன் கோபக்கனலோடு உரிமைகளைக் காப்போம் நீயிருக்கும் நினைவோடு!** ........................13
5. **தொழில்நுட்ப வளர்ச்சியும் ஸ்தாபனத்தில் தாக்கங்களும்** ......................17
6. **வாசகர் கடிதம்** ......................................18
7. **தோழருக்கு வீரவணக்கம்! வாழ்க உன் புகழ்!** ................................19
8. **வீட்டைச் சுமந்து மெல்ல ஊறும் நத்தைகள்...** ......................21
9. **ஒன்றிய பட்ஜெட் 2024 எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்** .........................22
10. **ஒன்றிய அரசின் - மக்கள் மீதான தாக்குதல்கள்** ...................24
11. **தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சேலம் மாவட்டம் 15 ஆம் மேட்டூர் வட்டக் கிளை மாநாடு** ...............26
12. **களம் மாறும்! கை மாறும்! புலம் மாறும்! போராட்டம் மாறாது...** ............................27
13. **தமிழ்நாடு மருத்துவ துறை நிர்வாக ஊழியர் சங்க பெருந்திரள் முறையீடு** ..................28
14. **ஒன்றிய பட்ஜெட் 2024 கண்டன ஆர்ப்பாட்டம்** ..........................29
15. **தோழர் ஆர்.எம்.எஸ் நினைவஞ்சலி கூட்டம்** ..........................32
16. **தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம் மாநில நிர்வாகிகள் தேர்தல்** ...............................................33
17. **தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம் 50 ஆம் ஆண்டு பொன்விழா சிறப்பு பேரவை** ..................................34

தலையங்கம்

# போராட்டங்கள் தொடரும்! வீறுகொண்டு எழும்

மாத ஊதியத்தை பத்தாயிரம் ஆக உயர்த்த வேண்டும் ஊதியத்தை மகளிர் திட்டத்துடன் வழங்குவதை கைவிட்டு வங்கி கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி டி எம் எஸ் வளாகத்தில் போராட்டம் நடத்த முடிவு செய்து வந்த மக்களைத் தேடி மருத்துவ திட்ட ஊழியர்களை வரும் வழியிலேயே கைது செய்துள்ளது தமிழ்நாடு காவல்துறை, பலர் அவரவர் ஊரிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். பலர் ரயில் நிலையங்களிலும், பஸ் நிலையங்களிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்தவர்களை பரனூர் மறைமலைநகர் ஆகிய இடங்களில் காவல்துறை தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளது. பெண் ஊழியர்களை ,பெண் காவலர்கள் இல்லாமல் ஆண் காவலர்களே மிரட்டி அராஜகமாக தடுத்து நிறுத்தி உள்ளனர். அதிகாலையில் தடுத்து நிறுத்தப்பட்டவர்கள் இயற்கை உபாதைகளை கழிக்க கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய தடைகளை மீறி டிஎம்எஸ் வளாகம் வந்தவர்களை போராட்டம் நடத்த விடாமல் காவல்துறை கைது செய்துள்ளது.

அதேபோல் தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பாக டிபிஐ வளாகத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஆசிரியர்களை அவர்கள் பணியாற்றும் பள்ளிகளிலேயே வைத்து கைது செய்திருப்பதும் சங்க பொறுப்பாளர்களை நள்ளிரவில் வீட்டில் நுழைந்து கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்ற நிகழ்வும் அரங்கேறி உள்ளது. முற்றுகைப் போராட்டத்திற்கு வேன்களில் வந்த ஆசிரியர்களை கண்ட இடங்களில் நிறுத்தி மண்டபங்களில் சிறை வைத்துள்ளது காவல்துறை. பல்வேறு தடைகளைத் தாண்டி டிபிஐ வளாகத்திற்கு வந்தவர்களை ஒன்று சேர விடாமல் வர வர தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளது காவல்துறை.

இந்த இரண்டு நிகழ்வுகள் மட்டுமல்ல சென்னையில் நடைபெறும் போராட்டங்கள் சமீப காலமாக காவல்துறையால் தடுத்து நிறுத்தும் போக்கு அதிகமாகி உள்ளது. நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்று வலியுறுத்தி ஜனநாயக வழியில் நடைபெறும் போராட்டங்களுக்கு காவல்துறை அனுமதி மறுப்பதும், ஒன்று கூடவே அனுமதிக்காமல் ஊழியர்களை அராஜகமாக கைது செய்வதும் என பல்வேறு அடக்குமுறைகளை காவல்துறை கையில் எடுத்திருப்பதை கண்டிப்பதோடு இத்தகைய போக்கினை தடுத்து நிறுத்தி ஜனநாயக வழியிலான போராட்டங்களை நடைபெற அனுமதிப்பது ஒரு சிறந்த ஜனநாயக தன்மையுடைய அரசின் கடமையாக இருக்கும் என்பதை தமிழ்நாடு அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம் அராஜக வழியினாலும் அடக்குமுறைகளினாலும் போராட்டங்களை தடுத்தி நிறுத்தி விட முடியாது. போராட்டங்களில் உள்ள நியாயங்களை உணர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதுமே போராட்டங்களை முடிவுக்கு கொண்டுவர வழிவகுக்கும்.

இலையெனில் போராட்டங்கள் தொடரும். அடக்க அடக்க போராட்டங்கள் வீறு கொண்டு எழும்.

**- ஆசிரியர் குழு ●**

# 2024 ஒன்றிய அரசின் பட்ஜெட் நடுத்தர ஏழை மக்களை ஏமாற்றும் பட்ஜெட்

ஒன்றிய அரசின் 2024-25 நிதியாண்டிற்கான பட்ஜெட் நடுத்தர மக்களை மேம்படுத்தும் பட்ஜெட், மேலும் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டு உள்ளனர். பழங்குடியின மக்கள், பட்டியலின மக்கள் , பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சேர்ந்த மக்களை முன்னேற்றும் வகையில் இந்த பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து 1 கோடி இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்த பட்ஜெட்டில் வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்பு , ஒளிமயமான எதிர்காலம் உருவாகும். உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக வளர்ச்சி பெறும். இந்த பட்ஜெட் உந்து சக்தியாக இருக்கும் பட்ஜெட் என்று பிரதமர் அவர்கள் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

**மக்களுக்கு எதிரான பட்ஜெட்**

2024-25 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய நிதி-நிலை அறிக்கை உண்மைகளை மறைத்து மக்கள் நலனுக்கு எதிராக கார்ப்பரேட்டுகளின் நலன்களுக்கு ஆதரவாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியை தக்க வைக்கவும், கூட்டணி கட்சிகளை திருப்திப்படுத்தவும் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

2024-25 ஆம் நிதியாண்டில் நாட்டின் வளர்ச்சி விகிதம் 8.2 சதவிதமாக உயரும் என நிதி அமைச்சர் முன்மொழிந்திருந்தார். ஆனால் வளர்ச்சி விகிதத்தில் 60 சதவீதம் பங்கு வகிக்கும் நுகர்வு விகிதம் பாதியாக குறைந்திருக்கிறது. இந்திய குடும்பங்களின் சேமிப்பு 48 சதவீதம் குறைந்திருக்கிறது. உணவு, பணவீக்கம் 9.4. சதவீதம் உயர்ந்திருக்கிறது. இந்த லட்சணத்தில் எப்படி வளர்ச்சி விகிதம் மட்டும் 8.2 சதவீதம் உயரும்? மோசடி புள்ளி விவரங்களால் ஒரு போதும் உண்மையான வளர்ச்சியை எட்ட முடியாது.

2021-22 ஆம் நிதியாண்டில் ரூ.2.89 லட்சம் கோடியாக இருந்த உணவு மானியத்தை ஒன்றிய அரசு படிப்படியாக குறைத்து இந்த பட்ஜெட்டில் ரூ.2.05 லட்சம் கோடி மட்டுமே ஒதுக்கியிருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் ரூ.84 ஆயிரம் கோடியை வெட்டியிருக்கிறது. இதேபோல் 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.2.51 லட்சம் கோடியாக இருந்த விவசாயிகளுக்கான உரமானியத்தை வெட்டி சுருக்கி இந்த நிதி நிலை அறிக்கையில் ரூ.1.64 லட்சம் கோடி மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூ.87 ஆயிரம் கோடியை குறைத்திருக்கிறது. இதுதான் ஏழைகள் மற்றும் விவசாயிகள் மீது ஒன்றிய மோடி அரசின் அக்கறை காட்டும் லட்சணமா?

புதிதாக வேலையில் சேரும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.5 ஆயிரத்தில் வேலையமர்த்தும் கார்ப்பரேட்டுக்கு ஒவ்வொரு தொழிலாளி வீதம் ரூ.72 ஆயிதரம் கொடுக்கப்படும் என்பது யாரின் நலனை முன்னிறுத்தும் திட்டம்? கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு பெரும் கார்ப்பரேட் அலுவலகங்களுக்கு ரூ.17 லட்சத்து 46ஆயிரம் கோடியை தள்ளுபடி செய்திருக்கிறது. ஒன்றிய அரசிற்கு கிடைக்கும் நேரடி வருமானம் மொத்தம் 5.74லட்சம் கோடி. அதில் தனிநபர் வருமானவரி ரூ.3.46 லட்சம் கோடி கார்ப்பரேட்டுகளின் வருமானவரி ரூ.2.10 லட்சம் கோடி மட்டுமே.

அப்படியிருந்தும் சாதாரண மக்களின் நலனை விட கார்ப்பரேட்டுகளின் நலனே மோடி அரசுக்கு முக்கியமாக இருக்கிறது.

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் பீகாருக்கு நேரடியாக அதிக நிதி ஒதுக்கீடும், ஆந்திhhவிற்கு பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் நிதியை ஏற்பாடு செய்வதாகவும் பட்ஜெட்டில் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இது ஆட்சியை தக்க வைப்பதற்கே தவிர அந்த மாநில மக்களின் நலன் கருதி அல்ல.

பொதுவாக பட்ஜெட் உரையைப் பார்க்கும் போது அது நிதி அமைச்சரின் சொல்லுக்கும் உண்மையான செயலுக்கும் இடையே உள்ள வஞ்சக வேறுபாடுகள் நன்றாகவே தெரிகிறது. அரசின் வருவாய் சுமார் 15 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ள போதிலும் செலவினம் வெறும் 5.9 விழுக்காடாகும். இது சென்ற ஆண்டு மொத்த உள்ள நாட்டு உற்பத்தியின் விழுக்காட்டில் 1.8 விழுக்காடு குறைந்திருக்கிறது.

மோடி அரசின் 10 ஆண்டு கால ஆட்சியில் மக்களின் வாழ்நிலை மிகவும் மோசமான நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. சமூகத்தில் சமத்துவமின்மை அதிகரித்திருக்கிறது. இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்ஜெட் பெரும் வர்த்தகக் கார்ப்பரேட் நிறுவனங்களை திருப்தி படுத்தும் விதத்திலும், உழைக்கும் மக்களை மேலும் வறுமையில் தள்ளும் விதத்திலுமே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

#### கார்ப்பரேட்டுகளுக்கு தாராளம்

மக்களின் வாழ்க்கை பிரச்சனைகள் எதையும் தீர்த்திடும் விதத்தில் எந்த அறிவிப்பும் இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை. மாறாக செய்யப்பட்டிருப்பதெல்லாம் உற்பத்தி மூலதன செலவினம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்கம் என்ற பெயரில் ஊக்கம் அளிக்கிறோம் என்ற பெயரில் அரசின் கஜானாவை தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மடைமாற்றம் செய்யும் விதத்திலேயே அமைந்திருக்கிறது. இதில் வேடிக்கை வினோதம் என்னவென்றால் இவ்வாறு மடைமாற்றம் செய்வதற்காக இதுவரை எவ்விதமான அமலாக்க முறையும் ஏறப்டுத்தப்படவில்லை.

பட்ஜெட்டில் மகளிர் மற்றும் குழந்தை வளர்ப்பதற்கான ஒதுக்கீட்டில் 2.5 விழுக்காடு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இன்றுள்ள பணவீக்க நிலையில் இதனை ஓர் உயர்வு என்று கூற முடியாது.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்கான ஒதுக்கீடு 2024 பட்ஜெட்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கப்படவில்லை. விவசாயத்துறை ஆழமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இன்றைய நிலையில் கிராமப்புற வேலையின்மையும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமாகியுள்ள நிலையில் இவ்வாறு இத்திட்டத்திற்கான செலவினமும் கூடுதலாக்கப்படவில்லை.

#### மானியங்கள் வெட்டு

உணவு, பணவீக்கம் ஏற்கனவே 8.4 விழுக்காடு அதிகரித்த நிலையில் உணவு மானியம் 3.33 விழுக்காடு அளவிற்கு வெட்டப்பட்டிருக்கிறது. அதே போன்று ரசாயன உரத்திற்கான மானியம் 13.18 விழுக்காடு குறைக்கப்பட்டிருக்கிறது. சமையல் எரிவாயுவிற்கான மானியம் கூட 2.57 விழுக்காடு,அதுபோல் எரிபொருள் மானியம் 11 ஆயிரம் கோடி குறைக்கப்பட்டுள்ளது.

#### தொழிலாளர் நலநிதி வெட்டு

தொழிலாளர் நல நிதியத்திற்கான (டுயbடிரச றுநடகயசந குரனே) ஒதுக்கீடும் 1200 கோடி ரூபாய் வெட்டப்பட்டிருக்கிறது. இத்துடன் தொழிலாளர் துறைக்கான பட்ஜெட்டிலும் 3200 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று கிராமப்புற வளர்ச்சி நிதியத்திற்கான (சுரசயட னநளநடடியீஅநவே கரனே) ஒதுக்கீடும் 20 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீடுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிலும் 1500 கோடி

ரூபாய் வெட்டப்பட்டிருக்கிறது. சுத்தமான தண்ணீர் திட்டத்திற்கான (ஊடநயச றுயவநச ஞசடிபசயஅஅந) ஒதுக்கீட்டிலும் 1500 கோடி ரூபாய் வெட்டப்பட்டிருக்கிறது. தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிலும் 4.3 விழுக்காடு குறைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு உணவு, உரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கான மானியங்கள் கடுமையாக வெட்டப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வேலை வாய்ப்புக்கு ஊக்க தொகை அளிக்கிறோம் என்ற பெயரில் அரசின் கஜனாவிலிருந்து மானியம் அளிக்கப்படுவது அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை எல்லாம் கண்காணிப்பதற்கான அமைப்புமுறை எதுவும் எற்படுத்தப்படவில்லை.

**கார்ப்பரேட்களின் வரி குறைப்பு**

இந்த பட்ஜெட்டில் வேலை வாய்ப்பு இணைக்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டம் என்ற ஒன்று 2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்திற்கான நிதியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட்டுகளுக்கு டவழங்கப்படும். அவர்கள் இத்தொகையை பெற்று தங்கள் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காகவும் அவர்களின் திறனை மேம்படுத்துவதற்காகவும் அளித்திடுவார்களாம்.

பல வகையான தள்ளுபடிகள் மற்றும் சலுகைகள் செயல்பாட்டில் இருப்பதால் முதல் முறையாக மொத்த நேரடி வரி வசூல்களில் கார்ப்பரேட் வரியின் பங்கு தனிநபர் வருவமான வரி (29.2சதவீதம்)க்கும் கீழே (27.2 சதவீதம்) ஆகக் குறைந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்தவுடன் நம் வெளிநாட்டுக் கார்ப்பரேட்களுக்கான கார்ப்பரேட் வரி இப்போது இருந்து வரும் 40 விழுக்காட்டிலிருந்து 35 விழுக்காடாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுத்துறை வங்கிகளில் கடன் வாங்கி விட்டு செலுத்தாத உள் நாட்டு மற்றும் வெளி!நட்டுக் கார்ப்பரேட்டுகளை காப்பாற்றி வரும் விதத்தில் மேலும் பல திருத்தங்கள் இந்த பட்ஜெட்டில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

**எரிசக்தித்துறை தனியார்மயம்**

பட்ஜெட்டில் எரிசக்தி மாற்றத்தின் மூலம் ஆற்றல் பாதுகாப்பு என்று கூறப்பட்டிருப்பது எல்லாம் அணுசக்தி உள்ளிட்ட கேந்திரமான எரிசக்தித்துறையை தனியாரிடம் தாரை வார்ப்பதற்கான சூழ்ச்சியேயாகும். மிகவும் முக்கியமான 25 கனிமங்களுக்கான கலால் வரிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. மொபைல்கள் மற்றம் துணைக் கருவிகளுக்கான வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்துமே மக்கள் மற்றும் நாட்டின் பொருளாதார நலன்களுக்கு எதிரான நடவடிக்கைகளேயாகும்.

**விவசாயத்தை கார்ப்பரேட்டுகளுக்கு தாரைவார்ப்பு**

பட்ஜெட்டில் விவசாயத்திற்கு ஒதுக்கீடு செய்யும் தொகை 2019 லிருந்து தொடர்ந்து குறைத்து கொண்டே வருகிறது ஒன்றிய அரசு. இப்போது 5.44 விழுக்காட்டிலிருந்து 3.15 விழுக்காடாகக் குறைத்திருக்கிறது. 2022-23 உடன் ஒப்பிடுகையில் 21.2 விழுக்காடு அளவிற்கு விவசாயம் மற்றும் அது தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு குறைந்திருக்கிறது. விளைபொருட்களுக்கு சி2+50 சதவீத அளவில் விலை நிர்ணயம் செய்வதற்கு எந்த வித நடவடிக்கையும் இல்லை.

நிதியமைச்சர் விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்திருப்பதாகக் கூறியுள்ள போதிலும் நடைமுறையில் அவர் வேளாண் கார்ப்பரேட்டுகளுக்கே முன்னுரிமை கொடுத்துள்ளாரே தவிர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மற்றும் ஏழைகளுக்கு எவ்வித முன்னுரிமையும் அளித்திடவில்லை.

பயிர் வளர்ப்பிற்கான ஒதுக்கீட்டில் 24.7 விழுக்காடும் உரங்களுக்கான ஒதுக்கீட்டில் 34.7 விழுக்காடும் வெட்டப்பட்டிருக்கிறது. அதாவது 2022-23ல் ஒதுக்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடும்போது சுமார் 87238 கோடி

வெட்டப்பட்டிருக்கிறது. இது விவசாயத்தில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்.

அதேபோல் பட்ஜெட்டில் பொதுத்துறை வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குள் பேயர் (கூயலநச)அமேசான்(ஹஅயணயா) போன்ற தனியார் நிறுவனங்கள் புகுவதற்கு வழிகாட்டப்பட்டிருக்கிறது. மேலும் விவசாயத்தில் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு அமுல்படுத்துவதற்கு முன்மொழிவு அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் கீழ் 6 கோடி விவசாயிகள் மற்றும் நிலங்கள் கொண்டு வரப்பட இருக்கிறது. இது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று விவசாயிகள் சங்கம் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

**வேலை கொடுப்பதாக சொன்னார்கள் தற்பொழு பயிற்சி அளிப்பதாக கூறுகிறார்கள்**

ஒன்றிய பட்ஜெட்டில் வேலை வாய்ப்பை உருவாக்க பிரதம மந்திரியின் தொகுப்பின் கீழ் 5 ஆண்டுகளுக்கு 5 திட்டங்கள் மூலம்2 லட்சம் கோடி ரூபாய் வரை செலவு செய்யப்படும் அறிவிப்பு ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை கொடுப்போம் என்று கிளம்பியவர்கள் 10 ஆணடுகளில் ஆட்சியில் இருந்து விட்டு தற்பொழுது வேலைக்கு பயிற்சி அளிப்போம் என்று கூறுகிறார்கள். கிடைக்காத வேலைக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி எடுத்து என்ன பயன்? 2016 முதல் 2022 வரை திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்களில் வெறும் 18 சதவிதம் பேருக்கு மட்டுமே வேலை கிடைத்துள்ளது என்று அரசு புள்ளி விவரம் தெரிவிக்கின்றன. வேலை இல்லாத போது வேலையில் சேர்ந்தால் ரூ.15,000 தருவேன் என்று சொல்வது படித்து முடித்து வேலை இல்லாமல் தவிக்கும் இளைஞர்களை கிண்டல் செய்வதாகும். ஆனால் வேலையில் இத்தனை பேரை சேர்த்துள்ளோம் எனக்கூறி நிறுவனங்கள் ரூ.72000 பெறுவார்கள்.

4.1 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு ஆண்டுக்கு 40 ஆயிரம் கோடி என்ற அடிப்படையில் 5 ஆண்டுக்கு சேர்த்து 2 லட்சம் போடி ரூபாய் செலவு செய்ய அரசு தயார் என்றால் அதை உண்மையாக புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த திட்டமிட்டு இருக்கலாம். அதை விடுத்து ஏற்கனவே அரசின் சலுகைகளால் கொழுத்துப்போய் இருக்கும் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மேலும் ஊக்கத் தொகை என்ற பெயரில் பணத்தை வாரிக் கொடுப்பது பெரும் மோசடியாகும்.

மூன்றாவது முறையாக பதவி ஏற்று மோடி அரசில் தொடர்ந்து ரயில் விபத்துகள் நடந்து கொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம் இந்திய ரயில்வேயில் 3 லட்சம் காலி பணியிடம் நிரப்பாமல் உள்ளது. இந்திய ராணுவதில் 1.5 லட்சம் காலி பணியிடம் இப்படி ஒட்டு மொத்தமாக ஒன்றிய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் காலி பணியிடம் 30 லட்சம் காலி பணியிடம் உள்ளன. இதை நிரப்புவது குறித்து எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை.

இந்தியாவில் வேலை செய்யும் தகுதியான மக்களின் எண்ணிக்கை 56.5 கோடி. அதில் விவசாயத்துறையில் வேலை செய்வோரின் எண்ணிக்கை 2017-18 ஆம் ஆண்டு 44 சதவீதமாக இருந்தது. 2022-23ஆம் ஆண்டு 46 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் தான் இந்தியாவில் தற்போதுள்ள வேலையின்மை நெருக்கடி தீர்ப்பதற்கு விவசாயம் இல்லாத மற்ற துறைகளில் 2030 ஆம் ஆண்டு வரை சராசரியாக ஆண்டுக்கு 78.5 லட்சம் புதிய வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் 2013-14 முதல் 2021-2022 வரை உற்பத்தி துறையில் வெறும் 3 லட்சம் வேலைகள் மட்டுமே அதிகரித்துள்ளது. உற்பத்தித்துறையில் வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்றால் உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும் என்றால் மக்களிடம் வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும.

**மாணவர் விரோத - குழந்தைகள் விரோத பட்ஜெட்**

பள்ளி மற்றும் உயர்கல்வி ஆகிய இரண்டு பெரும் சவால்கள் எதிர் கொள்ள எந்த

திட்டமிடுதலும் ஒன்றிய அரசின் 2024 பட்ஜெட்டில் இல்லை.

அரசு பள்ளிகளில் உள்கட்டமைப்புகளையும், கற்றல் திறனையும் மேம்படுத்த குறிப்பிட்ட திட்டங்கள் இல்லை. பள்ளிக் கல்விக்கும், எழுத்தறிவிற்குமான பட்ஜெட் ஒட்டு மொத்தமாக 1 சதவீதத்திற்கும் குறைவாகவே இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. 2023-24 72474 கோடி இப்போது 2024-25ம் ஆண்டு பட்ஜெட்டில் 73008 கோடி என்பது மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.

உயர்கல்விக்கான ஒதுக்கீட்டில் 17 சதவீதத்திற்கு நிதி குறைக்கப்பட்டுள்ளது. (ருழூஊ) நிதி வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு ரு.6409 கோடியிலிருந்து ரூ.2500 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இது 60 சதவீதத்திற்கும் அதிகமான வீழ்ச்சியாகும். இதனால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

இந்தியாவில் குழந்தைகள் 36சதவீதம் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 32 சதவீதம் குறைந்த எடை கொண்டவர்களாவும் இருக்கிறார்கள். உடனடியாக கவனிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் இருந்த போதிலும் 2024 பட்ஜெட்டில் முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. இளம் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குவதிலும், குழந்தைகளின் எதிர்கால கல்வி செயல்பாட்டிலும் மிக முக்கியமாக பங்கு வகிக்கும் அங்கன்வாடிகளுக்கான நிதி 1.5 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. 2023-24 பட்ஜெட்டில் (சு.நு) ரூ.21523 கோடியாக இருந்த அங்கன்வாடிகளுக்கான நிதி 2024-25 பட்ஜெட்டில் 21000 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 7 கோடி குழந்தைகள் அடிப்படையான எழுத்தறிவும், எண்ணறிவும் பெறாமலேயே ஆரம்பக் கல்வியை முடிக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு காரணம் மோசமான கற்றல் விளைவுகளுக்கு பற்றாக்குறையான பள்ளி உட்கட்டமைப்புகள் காரணமாகின்றன. அதுபோல் நாடாளுமன்ற நிலை குழுவின் அறிக்கை 44 சதவீதம் அரசுப்பள்ளிகள் மின்சாரம் இல்லாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த பட்ஜெட்டில் பொது கல்வி துறைக்கு 20 சதவீதம் தொழில் நுட்பக் கல்விக்கு 22 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வெட்டு மதிப்புமிக்க க்லவி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் கல்வியின் தரத்தை பராமரிப்பதில் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என கல்வியாளர்கள் சுட்டிக்hகட்டுகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க. ஆட்சியில் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் அரசு செலவினம் படிப்படியாக குறைந்து வருகிறது. குறிப்பாக1960ஆம் ஆண்டில் நியமிக்கப்படட கோத்தாரி கமிசன் பரிந்துரைத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த போதிலும் 2024 பட்ஜெட் இந்த தொடர் கோரிக்கையை நிறைவேற்றுவதில் இருந்து விலகியே இருக்கிறது.

**பெண்கள் பிரச்சனைகள் குறித்து ஒன்றிய பட்ஜெட்**

புதிய ஆட்சி அமைந்திருக்கும்தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கம்(பி. ஜேபி) இன்றைய தினம் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக எதார்த்த நிலையைக் கணக்கில் எடுத்து கொள்வதில் முற்றிலும் தோல்வியடைந்துள்ளது என்பதையே அது சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட் காட்டுகிறது. மேலும் நாளும் ஏறும்விலைவாசி உயர்வாலும், வேலையின்மையாலும் பெண்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கான சராசரி ஊரக பணவீக்கம் 6 முதல் 9.5 விழுக்காடாகும். ஆனாலும் இதை மறைத்து ஆட்சியாளர்கள் இது வெறும் 3.1 விழுக்காடு என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டை வஞ்சித்த பட்ஜெட்**

கடந்த 10 ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் உட்கட்டமைப்பிற்கு மற்ற

மாநிலங்களுக்கு ஒதுக்கிய நிதி காட்டிலும் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய நிதி குறைவு. இந்த பட்ஜெட்டில் அதுவும் இல்லை. வாரணாசியை விட 10 மடங்கு அதிக பயணிகள் பயணம் செய்கிற விமான நிலையம் மதுரை. அதை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கவில்லை. அதுபோல் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையை முடக்கும் வகையில் இருபது ஆண்டுகளாக செயல்பட்டு வரும் அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்திற்கு வழக்கமாக விடுவிக்கப்பட வேண்டிய நிதியைக்கூட நிறுத்தி வைத்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவோம் எனக் கையெழுத்து போட்டால் தான் நிதியை விடுவிப்போம் என்கிறது ஒன்றிய அரசு.

ஜி..எஸ்.டி வரி விதிப்பு முறையைக் கொண்டு வந்து மாநிலங்களின் வரி விதிப்பு உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசு அபகரிக்கிறது. அதனால் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.20 ஆயிரம் கோடி இன்னும் வழங்கவில்லை. அதுபோல் சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப்பணிக்கு 63 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்று 2024ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ஒன்றிய அரசு அறிவித்தது. அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை.

மேலும் கடந்த ஆண்டு தமிழ்நாட்டை இரண்டு முறை புயல்கள் தாக்கின. சென்னை உள்ளிட்ட மாவட்ட மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்கள் இயற்கை பேரிடர்களை சந்தித்தது. இதற்கு நிவாரணமாக 37ஆயிரத்து 907 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு செலவு செய்தது. ஆண்டு தோறும் வழக்கமாக சட்டபூர்வமாக வழங்க வேண்டிய 276 கோடியை அளித்துவிட்டு ஒன்றிய அரசு வஞ்சித்தது. அசாம், பீகார் மாநிலங்களுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து ஒரு ரூபாய் ஒன்றிய அரசுக்கும் வரியாக சென்றால் 29 காசுகள் மட்டுமே திரும்ப வருகிறது.ஆனால் பா.ஜ.க. ஆட்சி செய்யும் உ.பிக்கு 2 ரூபாய் 73 காசுகள் வழங்கப்படுகிறது. இப்படி ஒன்றிய அரசு பி.ஜே.பி. ஆட்சி செய்யாத மாநிலங்களை முழுமையாக வஞ்சித்துள்ளது.

மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசு ஊழியர்கள் மிகவும் எதிர்பார்ப்போடு இருந்த புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் அமுல்படுத்தப்படவில்லை. அதுபோல் அரசுத்துறையில் அவுட்சோர்சிங், ஒப்பந்தமுறை ரத்துசெய்வதும்,புதிய வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய அளவில் நிதி அறிக்கையில் அறிவிப்பு இல்லை. 8வது ஊதியக்குழு மற்றும் தனிநகர் வருமானவரி உச்சவரம்பு 10 லட்சம் உயர்த்தப்படவில்லை. பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரைவாக்கும் நிலை தொடர்ந்து கடைபிடித்துக்கொண்டு வருகிறது ஒன்றிய பி.ஜே.பி. அரசு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொதுவாக இந்த ஒன்றிய அரசின் பட்ஜெட் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களையும், எழை, எளிய, நடுத்தர மக்களையும் கசக்கிப் பிழிவதாகவும், கார்ப்பரேட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே சலுகை வழங்கக் கூடியதாகவும் ஒன்றிய அரசின் நிதி அறிக்கை மட்டுமல்ல ஒட்டுமொத்த பொருளாதா கொள்கையும் அமைந்துள்ளது.

வசதி படைத்தவர்களுக்கு செல்வ வரி விதிக்க வேண்டுமென்பதை ஏற்க மறுக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு அனைவரையும் ஜி.. எஸ்.டி. வரி வலையை மேலும் மேலும் விரித்துக்கொண்டே போகிறது. இருப்போருக்கும், இல்லாதோருக்குமான இடைவெளி அதிகரித்துக்கொண்டே செல்கிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றபோதிலும் பெரும் பகுதி மக்களை வதைப்பதை பி.ஜே.பி. ஒன்றிய அரசு மாற்றிக் கொள்ளவில்லை. மாநிலங்களுக்கு இடையே பாரபட்சம் அதிகரிக்கிறது. எனவே பி.ஜே. பி. ஒன்றிய அரசு ஆட்சியாளர்களுக்கு புரிய வைக்கும் மொழி போராட்டம் ஒன்றே. அப்படிப்பட்ட போராட்டங்களில் நாமும் பங்கெடுத்துக்கொள்வோம். ●

# எம்.ஆர்.அப்பன் ஓர் துருவ நட்சத்திரம்

**- ஏ. நிசார் அகமது**

"MRA" என எல்லோராலும் அன்புடனும், மரியாதையுடனும் அழைக்கப்படும் "MR அப்பன்" திசை தெறியாமல் திக்கற்று தவித்த அரசு ஊழியர், ஆசிரியர்களிடையே உதித்த ஒரு துருவ நட்சத்திரம். தமிழக அரசு ஊழியர்களிடையே அவர் வாழ்ந்து வழிகாட்டி, தலைமை தாங்காமல் இருந்திருந்தால், இன்றைய லட்சோப லட்சம் அரசு ஊழியர், ஆசிரியர்கள் அனுபவித்து வரும் ஓரளவு திருப்திகரமான பொருளாதார வாழ்க்கையை அடைந்திருக்கவே முடியாது. இன்றைய சமூக வாழ்வில் அரசு ஊழியர்கள் சுயமரியாதையுடனும், தன்மானத்துடனும், கௌரவத்துடனும் வாழ்வதற்கான அடித்தளத்தை உருவாக்கியவர்களில் MR அப்பன் முதன்மையானவர். அதனால் தான் லட்சோப லட்சம் அரசு ஊழியர்கள் அவரை ஆசான் என மனதில் நிறுத்தி போற்றிப் புகழ்ந்து வருகின்றார்கள்.

அவருடைய அறிவாற்றல், அணுகுமுறை, செயல்திறன், தைரியம், ஒற்றுமையை உருவாக்கி அதை கட்டிக்காப்பதில் அவருக்கிருந்த அக்கறை போன்ற பல வியப்பூட்டும் அம்சங்களை தொலைவிலும், அருகிலும் பார்த்து வியந்தபடி அவருடன் பழகும் வாய்ப்பைப் பெற்ற என்னை போன்ற பலர் இயக்க வளர்ச்சிப் போக்கில் அவரிடமிருந்து கற்றுக் கொண்டது ஏராளம் ஏராளம். என்னுடைய சொந்த வாழ்க்கையில் என்னுடைய குண நலன்களை இன்னும் செதுக்கி என்னை உருவாக்கி வருவது MRAவிடம் கற்ற பாடங்களே என்பது மிகையல்ல. அரசு அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் இருந்து வந்த சமூக நீதிப் பாகுபாடுகளையும் மேல் அதிகாரிகளின் திமிர்தனங்களையும், ஆணவ அராஜகப் போக்குகளையும், அரசுகளிடமிருந்து வந்த புறக்கணிப்பு மற்றும் ஏமாற்றும் நடவடிக்கைகளை சந்தித்துக் கொண்டு வாழ்வதுதான் அரசு ஊழியர்களின் "தலைவிதி" என "சங்கம்" என்கிற பெயரில் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த தலைமையை தட்டிக் கேட்டும் தையரித்தையும், திராணியையும் உருவாக்கிய எரியும் நட்சத்திரமாக திகழ்ந்தவர் தான் MR அப்பன். "அதோ தெரியுது பார் புதியதோர் பாதை" "விழிப்படை" நிமிர்ந்து நில்" "உணர்வுடனும், ஒற்றுமையுடனும் செயல்பட்டால் உன்னாலும் முடியும் தோழா" என அன்றைய இளைஞர்களை ஒரு துருவ நட்சத்திரம் போல் ஆகர்சித்து வழி காட்டி வாழ்க்கையில் முன்னேற வழி காட்டியவர்தான் MRA. காட்டு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுபவர்கள் கரை சேர கிடைத்த கட்டுமரமாக MRA இருந்தார் என்றால் அது மிகையல்ல.

"கேரளத்துக்காரன்", "மலையாளி" என்கிற காலத்திற்கொவ்வாத விமர்சனங்களை முன் வைத்து அவரை அரசு ஊழியர்களிடமிருந்து தனிமை படுத்திட அன்றைய சங்கத் தலைமையும், அரசும் கடுமையாக முயன்ற போது தனது செயல்முறையாலும், அர்ப்பணிப்புணர்வுடன் கூடிய தியாகத்தாலும் தனக்கெதிரான அனைத்து விமர்ச்சனங்களையும், சூழ்ச்சிகளையும் அடித்து நொருக்கி அரசு ஊழியர்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்தவர்தான் MR அப்பன்.

"நான்" என்கிற அகம்பாவத்தையும், எனக்கு மட்டும்தான் எல்லாம் தெரியும் என்கிற ஆணவத்தையும் என்னை போன்றவர்கள் ஒருபோதும் அவரிடம் பார்த்ததில்லை. பொறுப்புகளில் உயர் மட்டத்திலும் இருந்த அவர் ஒரு போதும் சுயகர்வியாக இருந்ததே இல்லை. நானும் உங்களில் ஒருவனே என்கிற உணர்வே அவரை மேலும் மேலும்

உயரங்களுக்கு கொண்டு சென்று வரலாற்று நாயகனாக ஆக்கியது.

**புதிய தோழர்களை தேடித்தேடி கண்டறிவதிலும் அவர்களுடன் சரிநிகர் சமானமாக நெருங்கி பழகுவதிலும் அவர்களை தன்னுடைய விசிறிகளாக ஆக்கிவிடாமல் அவர்களுடைய திறமைகளை கண்டறிந்து அவர்களுடைய சிந்தனை, செயல்முறை, அர்ப்பணிப்புணர்வு ஆகியவற்றை வளர்த்தெடுத்து அவர்களை தலைவர்களாக பரிணமிக்க வைப்பதில் அவர் காட்டிய ஆர்வமும், அக்கறையும் சாதாரணமானதல்ல. இன்றைக்கு பல்வேறு சங்க தலைமைப் பொறுப்புகளில் திறம்பட செயலாற்றி வரும் பலரும் அவரால் பயிற்றுவிக்கப்பட்டவர்களே. அவருடைய பரந்த மனப்பான்மைக்கு ஒரு சிறு உதாரணம் சொல்வது பொருத்தமாக இருக்கும்.**

ஒரு முறை மாநில அளவிலான ஊழியர் சந்திப்பு வேன் பிரச்சாரப் பயணத்தில் நானும் அவருடைய தலைமையில் பயணம் செய்தேன். அந்த பயணம் எனக்கும் நிறைய அனுபவ படிப்பனைகளை கொடுத்தது. சீர்காழி நீதிமன்ற வளாகத்தில் மதிய உணவு இடைவேளை கூட்டம், ஆயிரக்கணக்கான அரசு ஊழியர், ஆசிரியர், வழக்குரைஞர், பொதுமக்கள் என கூட்டம் நிரம்பி வழிந்தது. MR அப்பன் என்னையும், ஆர்.எம்.எஸ்யும் பேச கேட்டுக்கொண்டார். எனக்கோ மனதளவில் நடுக்கம். நீங்கள் பேசுவதுதான் நல்லது என நான் நைசாக நழுவ பார்ப்பேன். எம்.ஆர். அப்பனோ விடுவதாக இல்லை. என்னையும் ஆர்.எம்.எஸ் யும் பேச வைப்பதிலேயே குறியாக இருந்தார். பேசவும் வைத்தார். வேறு ஒருவராக இருந்திருந்தால் கூட்டத்தின் அளவைப் பார்த்தால் நானே பேசுகிறேன் என பேசியிருப்பார்கள். ஆனால் MRA என்னை போன்ற இளைய தலைமுறை, கூட்டத்தைப் பார்த்து அஞ்சாமல் பேசும் திறமையை பெற வேண்டும் என களத்தில் பயிற்சி கொடுத்தார். அதுதான் MRA அரசு ஊழியர் ஆசிரியரிடையே ஊதியம், அகவிலைப்படி, போனஸ் உள்ளிட்ட உரிமைகளின் கோட்பாடுகளை விளக்கிக்கூறி புரிய வைத்து, யாசித்து பெற்று வாழ்வது வாழ்க்கை அல்ல. உரிமைகளை போராடிப் பெற்று வாழ்வதே வாழ்க்கை என்கிற தாரக மந்திரத்தை அழுத்தம் திருத்தமாக பதிய வைத்து ஒற்றமையை முன்னின்று உருவாக்கி அதை சிதைந்து விடாமல் கட்டிக்காத்து வெற்றியை நோக்கி இட்டுச்செல்வதில் MRAவிற்கு நிகர் MRA. தான். அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கிடையில் வர்க்க உணர்வை உருவாக்கி அரசியலும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று பின்னி பிணைந்தது. அரசியலைப் பற்றி தெரிந்துக்கொள்ளாமல் நமக்கெதற்கு அரசியல் என விலகி நிற்பதால் நமக்கு விடிவு கிடைக்காது என்கிற அரசியல் கண்ணோட்டத்தை கற்றுக்கொடுக்க தோழர் MRA அரும்பாடு பட்டார்.

**போராட்டங்களை உருவாக்குவதிலும் அவற்றை வீரியம் குறையாமல் திறம்பட நடத்திச் செல்வதிலும், சூழ்நிலை மற்றும் தேவைகளையொட்டி அவற்றை பின்வாங்கி சென்று பின் பலமான ஒற்றுமையை உருவாக்கி மீண்டும் போராடி வெற்றி பெறும் போராட்ட யுக்தியை நன்றாக அறிந்தவர் MRA.** அவருடைய யுக்தியை ஆரம்பத்தில் விமர்ச்சித்தவர்களே பின்னாளில் பாராட்டி புகழ்ந்ததையும் நாம் பார்த்துள்ளோம். ஒவ்வொரு போராட்ட இயக்கமும் நடந்து முடிந்த பின்னர் அதனை ஆய்வு செய்து படிப்பினைகளை கற்றுக்கொள்வதில் எம்.ஆர். அப்பன் எப்போதுமே கவனமாக இருப்பார். மிகை மதிப்பீடு அல்லது குறை மதிப்பீடு செய்வதை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஸ்தாபன நடவடிக்கைகளில் கண்காணிப்பும், அக்கறையும் அவரிடம் எப்போதும் இருக்கும். யாரையும் எபோதும் எளிதாக இழந்துவிடும் அணுகுமுறையை கடைபிடிக்கமாட்டார். **தன் மீதான விமர்சனங்களை வரவேற்பதிலும், அவைகளை கேட்டு தவறுகள் இருந்தால் திருத்திக்கொள்வதிலும் அவர் சரியான போக்கை கடைபிடிப்பார். அவர் கூட்டங்களில் பேசும்போது தற்புகழ்ச்சியுடன் பேசியதே இல்லை. அவரை பிறர் புகழ்ந்து பேசவும் அனுமதிக்கமாட்டார்.** இப்படி பலப்பல அனுபவங்கள் இன்றைய தலைமுறை கற்றறிந்து முன்னேற வேண்டியது இன்றைய தேவை. *(ஆகஸ்ட் 30 தோழர் எம்.ஆர்.ஏ. நினைவுநாள்)* ●

# திரிகளின்றி தீ மூட்டிய உன் கோபக்கனலோடு உரிமைகளைக் காப்போம் நீயிருக்கும் நினைவோடு!

**- மு.அன்பரசு**

யாரும் செல்ல பயந்த பாதையில் முன்னே சென்ற ஒரு சிலரின் அனுபவத்தைப் பாடமாகக் கொண்டு கரடு முரடான பாதையில் நடந்து சென்று காலில்பட்ட கற்களையெல்லாம் பூக்களாக மாற்றியவர், நாமெல்லாம் ஆர்.எம்.எஸ். என்று அன்போடு அழைக்கின்ற அற்புதத் தோழர் ஆர். முத்துசுந்தரம்.

ஒரு அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் அதிகமாக இருப்பதால் அந்த பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டு அரசின் பெரும்பான்மையான துறைகளை தனியார் வசம் ஒப்படைத்து விடும் போக்கு இனி தொடங்கிவிடும் என்று 1990களில் தாராளமய, தனியார்மய. ஊலகமயக்கொள்கைகள் வருவதற்கு முன்பே அரசு ஊழியர், ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பு துறை ஊழியர்களுக்கும் முன்னறிவிப்பு செய்தவர் அவர்.

ஒரு மக்கள் நல அரசாங்கம் மக்கள் நலத் திட்டங்களுக்காக செலவிடும் தொகைகளையும் அதற்காக பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தையும் சுமையாக கருதுவது சமூகஅநீதி என பட்டிதொட்டியெல்லாம் முழங்கியவரும் அவரே. அவர் சொன்னது போலவே தனியார்மயமும் கார்ப்பரேட் மயமும் இன்று அரசாங்கங்களை ஆட்டுவிப்பதை நாம் பார்க்கிறோம்.

நம்முடனே இருந்து நம்மையெல்லாம் வழிநடத்தி நாம் கடந்து செல்ல வேண்டிய பாதையை, எதிர்கொள்ள வேண்டிய போரினை, செய்ய வேண்டிய கடமையை அவர் இருந்த காலத்தில் தொடர்ந்து சொல்லிச் சொல்லி நம்முடைய உரிமைகளுக்காகவும் மக்களின் நலன்களுக்காகவும் அரசாங்கத்தையே எதிர்த்துப் போராடுகிற உத்வேகத்தை நமக்கெல்லாம் தந்தவர் தோழர் ஆர்எம்எஸ் அவர்கள். தான் நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்திலும் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளில் இந்த அரசாங்கங்களின் நிலைப்பாடுகளையும் பொய்யுரைகளையும் நமக்கெல்லாம் விளக்கி நாமெல்லாம் கடுமையான உரிமைப் போராட்டத்திற்கு நம்மை உட்படுத்திக் கொண்டாலொழிய நம்முடைய உரிமைகளை தக்க வைக்க முடியாது என்று பின்னால் வருவதை முன்கூட்டியே அறிவித்து நம்மை அதற்கு தயார்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தியவர் தோழர் ஆர். எம்.எஸ்.

ஒருபுறம் சமூக நீதி, மக்கள் நலன், ஊழியர் நலனில் அக்கறை, பழைய ஓய்வுதியத்தை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அளித்துவிட்டு மறுபுறம் கவர்மெண்டை சந்தடியில்லாமல் கார்ப்பரேட் மயமாக்கும் போக்கு துவங்கி விட்டது என அரசின் நயவஞ்சக நோக்கை அவர் தன் அந்திம காலத்திலும் சொல்லத் தவறவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாற்றில் முதல் பாகம் தோழர் எம்.ஆர்.அப்பன் என்றால் அதற்கு சற்றும் குறைவில்லாத ஆளுமையும் தோழமையும்

கொண்ட வரலாற்றின் இரண்டாம் பாகமாக தோழர் ஆர். எம்.எஸ். விளங்குகிறார்.

தன் மீதான எந்த புகழ்ச்சியையும் மண்டைக்குள் ஏற்றிக்கொள்ளாமல் ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டுவிட்டு அடுத்தடுத்த வேலைகளுக்குள் ஆழ்ந்துவிடக்கூடிய ஆளுமை அவருடையது. போற்றுவார் போற்றலும், தூற்றுவார் தூற்றலும், போகட்டும் தோழமைக்கே. என்று புன்முறுவலோடு தன்மீதான தனிப்பட்ட விமர்சனங்களாகட்டும், பாராட்டுக் கணைகளாகட்டும் எந்த சலனமும் இல்லாமல் உள்வாங்கிக் கொண்டு கடந்து போகும் ஞானம் அவருடையது. இது அவருடைய ஒருபக்கம் தான். இன்னொரு பக்கம் அரசின் அடக்குமுறைகளை, உரிமை பறிப்புகளை பீரங்கி போல் எதிர்த்து நின்றவர். போராட்டக்களங்களில் அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சூரியப் பிழம்புகளாக வந்து விழுந்தவை. ஆதிகார வர்க்கத்தின், அரசாங்கங்களின் தொழிலாளர் மற்றும் ஊழியர் விரோதப்போக்கை பொதுமேடைகளில் கிழித்து தொங்கவிட்ட போர்க்குணம் அவருடையது. ஆட்சியாளர்களின் எந்தவித அச்சுறுத்தலுக்கோ மிரட்டலுக்கோ அடிபணியாதவர். அவர் தொழிலாளர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மனங்களில் நீங்காமல் நின்றிருப்பதற்குக் காரணம், தான் என்ன சொன்னாரோ அதன்படியே அவர் நின்றார். ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யாமல் அந்தப் பண்புகளை அவரும் கடைபிடித்தார். அதற்கு பல நிகழ்வுகளைச் சொல்லலாம்.

தோழர் ஆர்.எம்.எஸ். சென்னை பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவருடைய மலத்தை அப்புறப்படுத்த வந்த பணியாளரை அவர் அதை செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டார். ஏன் என்று கேட்ட பணியாளரிடம் “இதற்கு எதிராக தொடர்ந்து போராட்டம் நடத்தியவன் நான். இதை என் மனைவியோ நானோதான் சுத்தம் செய்ய வேண்டுமே தவிர உங்களுக்கு அது வேலையல்ல” என்று அந்த பணியாளரை சுத்தப்படுத்தவிடாமல் அனுப்பிவிட்டார். அந்த சமயத்தில் அவரை பார்க்க வந்த கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் “என்ன நீங்க போராட்டம் நடத்துகிறீர்கள், இதோ பாருங்கள், இது மாதிரி பணியாளர்கள் மற்றவர்களின் மலங்களை அள்ளுவதை சுத்தம் செய்வதை தடுக்காமல் வெளியில் போராட்டம் நடத்துகிறீர்கள். என்னுடைய அட்டண்டர் என்று ஒருவர் இருக்கும்போது இவர்கள் ஏன் இதைச் செய்கிறார்கள். மனித கழிவுகளை மனிதர்கள் அள்ளுவதை எதிர்த்து போராட்டம் நடத்துகிறீர்கள். இங்கே நிலைமை அதைவிட மோசமாக அல்லவா இருக்கிறது.” என்று கடிந்து கொண்டார். இந்த நிகழ்வு அவர் மரணப்படுக்கையில் இருந்தபோதும் தான் கடைபிடிக்கும் கொள்கைகளில் கடைசிவரை அவர் உறுதியோடு இருந்தார் என்பதை விளக்கும் நிகழ்வாகும்.

அதே போல் தான் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வராண்டாவில் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு “நான் இறந்தபிறகு என்னுடைய உடலை இங்கேதான் வைக்கணும். பக்கத்துல கோயில் இருக்கிறது. உடலை ரொம்ப நேரம் வைத்திருந்தால் அது அவர்களுக்கு அசௌகரியமாக இருக்கும். அதனால் அரைமணி நேரத்திற்குள் உடலை எடுத்துவிட வேண்டும். போன்றவற்றையெல்லாம் முன்கூட்டியே திட்டமிட்டு தான் இறப்பதற்கு சிலநாட்களுக்கு முன்பாகவே தான் இறந்த பிறகு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை எந்தவித அச்சமோ சலனமோ இல்லாமல் சொல்லக்கூடிய மனஉறுதி இறப்பிற்குப் பின்னரும் தனக்கு நடக்க வேண்டிய நிகழ்ச்சிநிரலைக்கூட முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்ட துணிச்சல் அவருக்க உரித்தான குணம், தான் சொன்னது போலவே

சரியாக ஒரு வாரத்தில் இறந்து போனதும் கூட அவர் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்தது.

சங்கத்திற்குள் சின்ன கருத்து வேறுபாடு வந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மையக் கட்டிடத்தில் அவர் இருக்கக்கூடாது என்ற நிலை ஏற்பட்டபோது, தொழிற்சங்கத்தலைவரும் எம். எல்.ஏ.வுமான தோழர் சௌந்தரராஜன் அவர்களுடைய அலுவலகத்தில் உட்கார்ந்து அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் அகில இந்திய துணைப் பொதுச்செயலாளராக பொறுப்புகளை ஆற்றினார். மேலும் அதே அலுவலகத்தில் தன்னுடைய சங்கக் கடமைகளை செய்து கொண்டிருந்தபோது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்படி அவர் மீதான தனிப்பட்ட வெறுப்புகள், காழ்ப்புணர்ச்சிகள், மூன்றாம் தர விமர்சனங்கள் அவமானங்கள் எதையும் பொருட்படுத்தாமல் தான் கொண்டிருந்த லட்சியத்திற்கான பயணத்தை முன்னெடுத்து சென்றவர்.

“குருதியைப் போல, கோள்களைப் போல, நதிகளைப் போல, நாட்களைப் போல இயங்கிக் கொண்டே இருப்பதுதான் மனித வாழ்வின் இயல்பு. இயங்கத் தயங்குபவர்களுக்கு ஒரு வார்த்தை, உலகம் உங்களை வாரிச்சுருட்டி வெளியே கொட்டுமுன் தயவுசெய்து வெளியேறி விடுங்கள், அல்லது இயங்கிக் கொண்டிருப்பதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளுங்கள்” இந்தக்கவிதை தோழர் ஆர்எம்எஸ்-ஸுக்கு பொருந்தும். அவர் இயங்கிக்கொண்டே இருந்தார் இயக்கமாகவும் இருந்தார் அவர் ஏற்றிவைத்த தீச்சுடர், ஒளிச்சுடர் நம் கையில் இப்போது இருக்கிறது. ஒலிம்பிக்கில் முதன்முதலில் ஓடியவன் இப்போது இல்லை. ஆனால், ஒலிம்பிக்கில் ஓடிக்கொண்டே இருக்கிறோமல்லவா? அதேபோல ஆர்எம்எஸ் இப்போது இல்லை. அடுத்த தலைமுறை அந்த ஓட்டத்தை நிறுத்தாது. அதற்கான கடமையும் பொறுப்புணர்வும் நம்மிடம் தொடர வேண்டும் என்பதற்காகவும் அவரின் செயல்பாடுகளை நாம் நினைவு கூர்கிறோம்.

அவருடன் மிக அருகாமையில் இருந்ததால் அவருடைய ஆளுமைகளையும், அவர் மீது வேண்டுமென்றே சில நபர்கள் சொன்ன மூன்றாம் தர விமர்சனங்கள், வசவுகள், ஏற்படுத்திய அவமானங்கள் போன்றவற்றை அவர் எதிர்கொண்ட விதத்தையும் நான் அருகிலிருந்து பார்த்து அதிசயித்துப் போயிருக்கிறேன். அவர்மீது ஏவப்பட்ட அவமானங்களையும் விமர்சனங்களையும் கண்டு எனக்கு கொதிப்பாக இருக்கும் கோபம் பொங்கும் ஆனால் தோழர் ஆர். எம்.எஸ். அவற்றை சிறிதும் பொருட்படுத்த மாட்டார். அவரிடம் ஏன் தோழர் உங்களுக்கு கோபம் வரவில்லையா என்று கேட்டால் “பொதுவாழ்வில் விமர்சனங்கள், வசவுகள் அவமானங்கள் போன்றவை நம் லட்சியத்தை தடுக்கப்பார்க்கும் தடைக்கற்கள் அவற்றை தொட்டுவிடாமல் அவற்றின் மீது ஒரு பாலம் போட்டுவிட்டு பயணிக்க ஆரம்பித்துவிட்டால் நாம் நினைக்கும் லட்சியத்தை நாம் திட்டமிட்ட நேரத்தில் அடைந்துவிடலாம்” என்பார்.

அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டது நிறைய. மேடையில் ஊழியர்களை கவரும்படியும் அதே நேரத்தில் உள்ள பிரச்னைகளை மிகைப்படுத்தாமலும் எப்படி பேசவேண்டும். ஊழியர்களுக்கு பேச்சினூடே எப்படியெல்லாம் உத்வேகம் அளிக்க வேண்டும் என்பதை பற்றியும் கட்டுரைகள் எழுதிக் காட்டும் போது அதில் வரலாற்று பின்னணி, அரசின் தற்போதைய நிலைப்பாடு, நம்முடைய கோரிக்கை, அதை நியாயப்படுத்தும் காரணங்கள் என்று வரிசைப்படுத்தி திருத்திக் கொடுப்பார். எந்த மாதிரியான புத்தகங்களை படிக்க வேண்டும்? எந்தவிதமான தத்துவார்த்த புரிதல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது போன்ற ஏராளமான விஷயங்கள் அவர் பொதுச்செயலாளராக

இருந்த காலத்தில் அவருடன் மாநிலச் செயலாளராக பொறுப்பாற்றிய வேளையில் நான் கற்றுக்கொள்ள நேர்ந்தது. அதன் காரணமாகவே அவர் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து கொண்டு சவால்களை எதிர்கொண்டு ஊழியர் விரோதப் போக்கை கடைபிடிக்கும், உரிமைகளை தர மறுக்கும் அரசாங்கங்களை துணிச்சலாக எதிர்கொள்வதற்கான வல்லமையும், தனிப்பட்ட விமர்சனங்களையும், அவமானங்களையும் தாங்கிக் கொண்டு லட்சிய நோக்கோடு சங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் அருகாமையையும், தோழமையையும், ஆளுமையையும் அவரின் அறிவுறுத்தல்களையும் நான் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளாமலிருந்திருந்தால் அதிகார வர்க்கத்தால் எப்போதோ பந்தாடப்பட்டிருப்பேன். போராட்டமாக இருந்தாலும், அரசுடன் பேச்சுவார்த்தை என்றாலும், தனிப்பட்ட விமர்சனங்களானாலும் நான் எப்போதும் நினைத்துக் கொள்வது தோழர் ஆர். எம்.எஸ்.அவர்களைத்தான்.

மாபெரும் தொழிற்சங்கத் தலைவர்கள், முன்னோடித் தோழர்கள் காலங்காலமாக போராடி உருவாக்கிய ஊதியக் கட்டமைப்பு சிதைந்து ஊதிய விகிதங்களுக்குப் பதிலாக தொகுப்பூதியம், தினக்கூலி என்ற கொள்கை பரவலாகி அதுவும் மாறி அவுசோர்சிங் முறையில் வேலைகள் வாங்கப்படுகிற நிலையில் ஊழியர் மற்றும் தொழிலாளர் வர்க்கங்கங்கள் தங்கள் அடையாளங்களை வேகமாக இழந்து வருகின்றன, முறைசாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. நாட்டில் நிலவும் இத்தகைய பிரச்னைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு, அணிதிரட்டப்பட்ட அரசு ஊழியர் வர்க்கமும் தொழிலாளர் வர்க்கமும் உறுதிமிக்க போராட்டங்களில் ஈடுபடுவது மட்டுமே என்று தொடர்ந்து சொல்லி வந்தவர் தோழர் ஆர். எம். எஸ். அனைத்து உழைக்கும் வர்க்கமும் ஒரு கொடையின் கீழ் அணிசேர்ந்து போராடினால் மட்டுமே கீழடுக்குகளில் உள்ளவர்கள் ஏற்றம் காண முடியும் என்று அடிக்கடி பேசிவந்ததோடு மட்டுமல்லாமல் அதற்கான முயற்சிகளையும் எடுத்து வந்தவர் அருமைத்தோழர் ஆர்.எம்.எஸ். நாம் வாழும் காலத்தில் நம்மை வழிநடத்திய தோழர் ஆர்.முத்து சுந்தரம் அவர்கள், அவருடைய பெருங்கனவை நினைவாக்கியவர்கள் என்ற பெருமை நம்மையெல்லாம் சேர தோழர் அர்.எம். எஸ். அவர்களின் இந்த நினைவு நாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம். அவருடைய நெஞ்சுரத்துடன், உரிமைகளை முனைப்புடன் பெறுவதற்கான புதிய போராட்டக் களங்களை வடிவமைப்போம். தோழர் ஆர்.எம்.எஸ். நினைவு நாளில் நாம் அவருக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலி அவர் விட்டுச் சென்ற இயக்கப் பணிகளை வெற்றிகரமாக முடித்துக்காட்டுவதே. அதற்கான உறுதியை இந்நாளில் ஏற்போம். அதுவே நாம் தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். அந்த உறுதியோடு நாம் அவருக்கு நம்முடைய அஞ்சலியை செலுத்துவோம்.

*ஒவ்வொரு போராட்டமும் உன்*
*போர்க் குணத்தை ஞாபகமூட்டும்!*
*ஒவ்வொரு உரிமையும் உன்*
*வியர்வைத் துளிகளை நினைவூட்டும்!*
*ஒவ்வொரு வெற்றியும் உன்*
*ஓயா உழைப்பினை பட்டைதீட்டும்!*
*ஒவ்வொரு தோல்வியும் உன்*
*உயிர் வலியை சுட்டிக்காட்டும்!*

*ஒவ்வொரு நினைவு தினமும்*
*எங்களைச் செதுக்கிய உன்*
*வார்த்தை உளிகளை*
*வண்ணம் தீட்டும்!*

*திரிகளின்றி தீ மூட்டிய*
*உன் கோபக் கனலோடு*
*உரிமைகளை காத்திடுவோம்*
*எம்மோடு என்றென்றும்*
*நீயிருக்கும் நினைவோடு!*

●

கட்டுரை

# தொழில்நுட்ப வளர்ச்சியும் ஸ்தாபனத்தில் தாக்கங்களும்

**– மு.பாஸ்கரன்**

அரசு ஊழியர்களின் பொருளாதார தரத்தை மேம்படுத்தவும், ஊழியர்கள் பணிபுரியும் அலுவலகங்களில் பாதுகாப்பு கேடையமாகவும் மற்றும் சமூகநோக்கத்தோடும் அரசு ஊழியர்களின் மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பினை நிறைவேற்றும் வகையில் தொடங்கப்பட்டது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். நமதமைப்பு எண்ணற்ற சவால்களையும், சோதனைகளையும் கடந்து பல்வேறு அடக்குமுறைகளை சந்தித்து முன்னோர்கள் செய்த அளப்பறிய தியாகம் மற்றும் ஒற்றுமையின் காரணமாகவும் கடந்த 40 ஆண்டுகளாக அனைவருக்கும் சவால்விடும் ஸ்தாபனமாக திகழ்ந்து வருகிறது என்பதை சுட்டிக் காட்டும் போது அனைவருக்கும் சரி என்று தான் தோன்றும். அதே வேளையில் ஸ்தாபன பணிகள், உறுப்பினர் சேர்க்கைப் பணிகள், போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் மாநாடு பேரவை முறையாக நடைபெற்று வருவதையும் மறுக்க இயலாது. இருப்பினும் கடந்த காலத்தில் நடைபெற்ற ஸ்தாபன பணியின் தன்மை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த வேண்டிய தேவை தற்போது எழுகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வட்டஃமாவட்டங்களில் தன்னிச்சையாக செயற்குழுஃகிளைக்கூட்டங்கள் கூடி உறுப்பினர் சேர்க்கை மற்றும் ஸ்தாபன பணிகள் திட்டமிட்டு பெரும் பகுதி களப்பணி ஊழியர்களை மாதத்தின் கடைசி தினத்தில் ஊதியம் பெற அலுவலகத்திற்கு வரும் தினத்தில் களப்பணி ஊழியர்களை நேரடியாக அணுகி உறுப்பினர் சந்தா சேர்ப்பதும் செவ்வாய்க்கிழமைகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு களப்பணியாளர்கள் ஆய்வு கூட்டத்திற்கு வருகை தரும் தினத்தில் உறுப்பினர் சேர்க்கை பணியை மேற்கொள்வதும் இதர துறைகளில் ஊழியர்களின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு அதற்கேற்ப திட்டமிட்டு வட்டக்கிளை நிர்வாகிகள் சைக்கிளில் சென்று ஊழியர்களை சந்தித்து உறுப்பினர் சந்தா சேர்த்து துடிப்புமிக்க இயக்கமாக உறுப்பினர் சேர்க்கை பணிகள் நடைபெற்றது. அதோடு மட்டுமல்லாமல் ஸ்தாபன பணிகளுக்கு என போதிய நேரத்தை ஒதுக்கி திட்டமிட்டு சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னனி ஊழியர்கள் தியாக மனப்பான்மையுடன் செயல்பட்டனர். ‘தானாக எவரும் உறுப்பினராக சேர மாட்டார்கள் என்பதை உணர்ந்தும் சகிப்புத்தன்மையுடனும் தொடர் முயற்சியால் உறுப்பினர் சேர்க்கை பணிகள் மேற்கொண்டதை நினைவுப்படுத்தி பார்க்கும்போது முன்னோர்கள் செய்த பணி பிரமிப்பாக உள்ளது”.

**தொழில்நுட்ப வளர்ச்சியால்..**

அலுவலகங்களில் தட்டச்சு நடைமுறையில் இருந்த காலங்களில் ஊழியர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசுத்துறை உயர் அலுவலர்களை சந்தித்த போது தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அலுவலகங்களில் படிப்படியாக காகிதம் இல்லா நடைமுறை புகுத்த இருப்பதாகவும் இதனால் ஊழியர்களின் பணிச்சுமை குறையும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மாறாக மத்திய மாநில அரசுகள் அனைத்து அரசு துறைகளிலும் தொழில்நுட்ப வளர்ச்சியினை நடைமுறைப்படுத்திய பின்னர் குறிப்பாக தட்டச்சு மறைந்து கணினி பயன்பாடு கொண்டு வந்த பின்னர் தற்போதைய பணியின் தன்மை ஊழியர்களின் மூளையினை மழுங்கடிக்க செய்து பெரும் மன உளைச்சலுக்கு

ஆளாக்கி பணி நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். சனி ஞாயிறு கிழமைகள் அறிவிக்கப்படாத பணி நாட்களாக மாறிப் போன அவலத்தை காண முடிகிறது. இதனால் தியாக மனப்பான்மையுடனும் ஸ்தாபன பணிகளுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி ஸ்தாபன பணிகளை திட்டமிட்டு குறிப்பாக உறுப்பினர் சேர்க்கை பணிகள் மேற்கொள்வது, உறுப்பினர்களிடம் ஒரு நெருக்கமான தொடர்பு ஏற்படுத்தி வேலை பார்க்கும் இடங்களில் அடிக்கடி ஊழியர்களை சந்தித்து பேசுவதும் ஊழியர்களின் பிரச்சினைகளை தாமாக புரிந்து கொண்டு பிரச்சினையில் தலையிடுவதும் இதன் மூலம் ஒரு உறுப்பினர் முன்னணி ஊழியராக உருவாக செய்வதும் என்கின்ற தொடர்ச்சியான நிலை இல்லாமல் போனது. ஆகையால் புதியதாக பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு சங்கத்தின் அவசியம்; மற்றும் புரிதல் இல்லாமல் போய்விட்டதால் அடுத்த தலைமுறையினரை உருவாக்குவதிலும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. மேலும், அரசு ஊழியர்களின் ஊதியத்தை நேரடியாக ஊழியர்களின் வங்கிக்கணக்கில் ஈடு செய்வது நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் பெரும் பகுதி களப்பணி ஊழியர்களை சந்திக்க இயலாத நிலையும் சங்க ஸ்தாபன பணிகளில் பெறும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**இறுதியாக.....**

'அளவு மாற்றம் குணம் மாற்றத்தை உருவாக்கும்" என்பது பொதுவான விதி. இது அறிவியலுக்கு மட்டுமின்றி அமைப்பிற்கும் பொருந்தும் உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக அதிகமாகத்தான் நம்பிக்கையும் அதிகமாகும். ஊழியர்களுக்கு துணிச்சலும் அதிகமாகும். நமது நிலுவைக் கோரிக்கைகளை வென்றெடுக்கவும், வென்ற கோரிக்கைகளை பாதுகாக்கவும் அரசுக்கு எதிரான வலுவான போராட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் போது தான்

வெற்றிகளை பெற முடியும், இந்த சுழற்சியில் தடைகள் ஏதும் ஏற்படாமல் ஸ்தாபனம் இயங்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் இக்கடமையை உணர்ந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. ●

# வாசகர் கடிதம்

**- ம.அந்தோணிசாமி**

ஆசிரியர் குழுவிற்கு வணக்கம். தலைவர் மடல் பொதுச் செயலாளர் மேச்சையிலிருந்து ஆகிய கட்டுரைகளில் உள்ளடக்கம் ஓய்வூதியத்தை மட்டுமே முன்னிறுத்தி கருத்து வலுவாக உள்ளது பட்ஜெட்டில் உள்ள கொள்கை குறிப்பு குறித்தும் காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வருவது குறித்தும் ஒப்பந்த கூலி முறை தொகுப்பூதிய முறை ஊழியர்கள் பெருகி வருவது குறித்தும் ஆழமான கருத்தினை பதிவு செய்து இருக்கலாம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் தோழர்இரா. சீனிவாசன் அவர்களின் ஆர் எம் எஸ் நினைவு கட்டுரை வாசித்தேன் மீண்டும் ஒருமுறை என் கண்களை குளமாக்கியது தியாகம் என்றால் என்ன என்பதற்கு தோழர் ஆர் எம் எஸ் அவர்களும் ஒரு காரணியாக இருக்கின்றார். குறிப்பாக அந்த கட்டுரையில் இதை வலுவாக சொல்லி இருக்க வேண்டும். முதல் தலைமுறை நிர்வாகிகள் பட்டியலில் தோழர் ஆர் எம் எஸ் அவர்களும் மாநில செயலாளர்.

அவர் அந்த காலகட்டத்தில் லாரியில் பயணிப்பார். சங்கத்திற்கு செலவு வைக்க மாட்டார். கிருஷ்ணபிரியா அவர்களின் கவிதை மாற்று சிந்தனைக்கான விதை. வாழ்த்துக்கள்.

●

# தோழருக்கு வீரவணக்கம்! வாழ்க உன் புகழ்!

**- கே.எம்.தியாகராஜன்**



**அரசு ஊழியர் இயக்கத்தின் ஆளுமையே! உழைப்பாளி மக்களின் உயிர் தோழனே!**

எங்களை விட்டு பிரிந்து ஆண்டுகள் ஆறு கடந்து விட்ட போதும் எங்களின் உயிராய், உயிர் மூச்சாய் , உணர்வாய் இருந்து இன்றும் எங்களை இயக்குபவனே!

நீங்கள் விட்டு சென்ற இயக்கத்தை, இயக்கப் பணியை, வர்க்க அரசியலை கண்ணாய், , கண்ணின் மணியாய் இருந்து பாதுகாப்போம்! சமரசமற்ற போராட்டத்தால் அதிகார வர்க்கத்தையும், அன்பால், அரவணைப்பால் அமைப்பே அரசியல் சட்டம் என அதன்வழி பிறழாமல் நின்றதால் துரோக கூட்டத்தையும் வெற்றி கண்டவன் நீ!

அநீதி கண்டு பொங்கி எழுந்து அதை வேரோடு, வேரடி மண்ணோடு வெட்டி சாய்த்த மாவீரன் நீ! சாஸ்திரிகள் குடும்பத்தில் பிறந்தாலும் சாஸ்திரங்களை எதிர்த்து நின்ற அக்ரகாரத்து மீன்(தீப்பிழம்பு) குழம்பு நீ! வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றாய் வாழ்ந்து காட்டிய தோழன் நீ! விரல் மறைக்கும் ஒல்லியான உருவம் ஒலி வாங்கி முன் நின்று நீ பேசினால் உனது வெண்கலக் குரலால் வந்த கூட்டம் உன் வசப்படும்! மாற்று முகாமும் உன் வசப்படும். அதிகார வர்க்கமும் மண்டியிடும்! வெண் சீருடையில் வெண்கலக் குரலில், மடை திறந்த வெள்ளம் நீ போடும் கோரிக்கை முழக்கம் இன்றும் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

எங்கள் கண்களில் உங்கள் முகம் தெரிகிறது! எங்கள் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து இருக்கிறது! 1988 போராட்டத்தை அந்த வீர காவியத்தை மகாபாரதம், ராமாயணம் போன்ற கற்பனை காவிய நிகழ்வுகளுடன் கண்முன் கொண்டு வந்து ஒப்பு நோக்கி பேசி புதிய இலக்கணம் படைத்தவன் நீ! தமுஎகச மேடையில் ஈரோடு முத்துசுந்தரம் என்ற பெயரில் ஏராளமான கலை இலக்கிய மேடையில் பேசி மக்களை கவர்ந்தவர் நீ! கருத்தம்மா,

திரைப்பட வெற்றி விழாவில் நீங்கள் பேசிய உரை வீச்சால் இயக்குநர் இமயம் பாரதிராஜாவும் திரைப்பட கலைஞர் சிவக்குமார் அவர்களும் வியந்து பாராட்டி நமது இயக்கத்தின் பெயரை தலைநிமிர்ந்து பார்க்க வைத்தவன் நீ!

நமது கூட்டங்களில் நீ பேசி விட்டு சென்றால் ஊரெல்லாம் உன் பேச்சாக தான் இருக்கும்! அதிகார வர்க்கத்தின் அடி வயிற்றை கலக்கும்! முடங்கி கிடந்தவனும் எழுந்து நடப்பான்! அகில இந்திய சம்மேளனத்தின் பொதுச்செயலாளர், தலைவர் பொறுப்புகளில் நாடு முழுவதும் குறுக்கிலும், நெடுக்கிலும் பல ஆயிரம் கிலோமீட்டர் பயணித்து இயக்கப்பணியாற்றினாய்! இந்திய தொழிலாளி வர்க்கத்தின் பிதாமகன் சுகுமால்சென் அவர்களை தொடந்து அகில இந்தியா முழுவதும் கொள்கை முழக்கமிட்டு உழைப்பாளி மக்களின் உன்னத தோழனாக இருந்தாய்!

ஒருமுறை பாராளுமன்ற நிலைக் குழுவில் புதிய பென்சன் திட்டத்தின் ஆபத்தான அம்சங்களை சுட்டிக் காட்டி பழைய பென்சன் தொடர வேண்டும் என ஆதாரங்களுடன் ஆட்சியாளர்களுடன்நீங்கள் நடத்திய விவாதங்களால் நிலைக் குழுவில் இடம் பெற்ற திரு. ஜெயராம் ரமேஷ் (காங்கிரஸ்) திரு. யஷ்வந்த் சின்கா (பா ஜ க) இருவரும் நிலைகுலைந்து போனார்கள்! 2003 போராட்டத்தில் 1லட்சத்து 75ஆயிரம் பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டு சங்கம் நடத்த முடியுமா? பணியில் இணைய முடியுமா? என்ற அச்சம் கலந்த ஒரு நிலை ஊழியர்கள் மத்தியில் இருந்த போது தமிழக தொலைகாட்சியில் தினமும் தோன்றி ஊழியர்களுக்கு தைரியமும் நம்பிக்கையையும் கொடுத்தாய்!

ஆளும் வர்க்கத்துக்கு சவாலாக இருந்தாய்! அரசியல் மாற்றத்தின் காரணியாக நீ இருந்தாய்! நாடு முழுவதும் பயணித்து ஊழியர்களை பாதுகாத்திட 2 கோடி வரை நிதி திரட்டிய பெருமைக்கு வித்திட்டாய்! பட்டிதொட்டியெல்லாம் அரசு ஊழியர் சங்கம் என்ற மாபெரும் அமைப்பு மக்கள் மத்தியில் செல்ல காரணமாக நீ இருந்தாய்! சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டில் மக்களை நோக்கிய பயணம் உருவாக்க நீயும் நெம்புகோலாக இருந்தாய்! அரசு ஊழியர் இதழில் பொதுச்செயலாளர் மேசையில் இருந்து என்ற பகுதியில் ஏராளமான விஷயங்கள் போராட்ட அனுபவங்கள் படிப்பினைகள் பற்றி நீ எழுதினாய்!

வெண்மணித்தீயின் வெளிச்சத்தில், போன்ற தலைப்புகளில் நீ படைத்த படைப்பின் மூலம் அடுத்த இதழ் எப்போது வரும் என்ற வாசிக்கும் ஆவலை வாசகர்கள் மத்தியில் உருவாக்கினாய்! புதிய பென்சன் திட்ட பாதிப்பை முதலில் சொன்னவன் நீ!

நீ வைத்த நெருப்பு தான் அனலாய், கனலாய் இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.! தனியார் மயம், தாராள மயம், உலகமயம், ஒப்பந்த மயம், அவுட் சோர் சிங் உள்ளிட்ட கோரிக்கைகளை வென்றெடுக்க நீ நடத்திய போராட்டங்களை, நீ பேசிய பேச்சுக்களை, ஆற்றிய பணிகளை, தனி மனித ஒழுக்கத்தை, சாதி, மத உணர்வுகளை புறந்தள்ளி வர்க்க அரசியலை முன்வைத்து ஆற்றிய சங்கப் பணிகளை நீ காட்டிய வழியில் முன்னெடுப்போம் தோழர்! போராட்ட பதாகையை உயர்த்தி பிடிப்போம் தோழர்!

●

கவிதை

# வீட்டைச் சுமந்து மெல்ல ஊறும் நத்தைகள்...

**– கிருஷ்ணபிரியா**

கொஞ்சமும்
அலுத்துக் கொள்வதில்லை
வீட்டைச் சுமந்து
மெல்ல ஊறும் நத்தைகள்...

முதுகில் மூட்டையாய்
கனக்கும் பாரத்தால்
அவற்றுக்கு
வேக நடை சாத்தியமற்றுப்
போனது...

சின்ன சின்ன
உணர்விழைகளால் பாதையை
அழுந்தப் பற்றி
ஊறும் நத்தைகள்
தமது பயணத்தை
தடங்களாக பதித்தப்படியே
நகர்கின்றன...

எதிரிகள்
எதிர்ப்படும் நேரங்களில்
மட்டுமல்ல...
சுகமான ஓய்வுக்கும்
கூட கூட்டுக்குள்ளேயே
தம்மை இழுத்துக்
கொள்கின்றன...

வீட்டைச் சுமந்து
திரிகிறாய் என்று
விரல் நீட்டி கேலி
பேசுவோர்க்கும்
அவ்வப்போது
வீட்டுக்குள் சுருண்டே
பதில் தருகின்றன...

வாரியணைத்த சிலரால்
வெந்நீரில் விழுந்து
வீடோடு உயிரும் இழந்தது
படிப்பினை நிகழ்வு
பார்ப்போர்க்கு மட்டும்...

என்றாலும்...
ஈரம் உலர்ந்த சுவடுகளை
தம் பின்னே வரைந்தபடி
வீடுகளை இழக்காமல்
மெல்லவே ஊர்கின்றன
இலக்கை நோக்கி...

இன்னமும்
உயிரோடும்,
உணர்வுகளோடும்
நத்தைகள்...

கட்டுரை

# ஒன்றிய பட்ஜெட் 2024 எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

**- ஆர்.நடராஜன்**

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டின் பெயரோ, திருவள்ளுவர் பெயரோ, ஏன் - ஒரு திருக்குறளோ கூட இந்த ஆண்டிற்கான ஒன்றிய பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

பீகார் மற்றும் ஆந்திர மாநிலத்திற்கான சிறப்பு ஒதுக்கீடுகளுக்கும் இந்த புறக்கணிப்புக்கும் உள்ள தொடர்புகளை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

### ஜோசிய கணிப்புகள்

ஒன்றிய அரசு பட்ஜெட் தேதி அறிவித்த உடன் சில வாட்ஸ்அப் ஜோசியர்கள் நடுத்தர வர்க்கத்தின் எதிர்காலத்தை சுத்த வாக்கிய பஞ்சாங்க முறையில் கணிக்கத் தொடங்கி விட்டார்கள்.

- மாத சம்பளதாரர்களுக்கு இந்த ஆண்டு நிச்சயம் வருமான வரி விலக்கு உச்சவரம்பு ரூ.10 லட்சமாக உயர்த்தப்படும்,
- உத்திரவாதமான பென்ஷன் குறித்து ஊழியர்கள் மகிழத்தக்க வகையில் பட்ஜெட் தயாராகிக் கொண்டிருக்கிறது,
- எட்டாவது ஊதியக் குழு அமைப்பது குறித்து அறிவிப்பு நிச்சயம்,
- ஒன்றிய அரசு / பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள 30 லட்சம் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிப்புகள் வரும்,
- குறிப்பாக தமிழகத்திற்கு சாதகமான (எய்ம்ஸ், மெட்ரோ ரயில் நிதி ஒதுக்கீடு) அறிவிப்புகள் அதிரடியாக வரும் ...... (2026 சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்தாம் !)

என்று ஆரூடம் கூறியவர்கள் எங்கே போனார்கள் என்றே தெரியவில்லை.

### அல்வா

அல்வா கிண்டும் போதே நாம் சுதாரித்து இருக்க வேண்டும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட நடுத்தர வர்க்கம், தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர், வேலைக்காக காத்து நிற்கும் இளைஞர்கள் ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் ஏமாற்றமடைந்துள்ளார்கள். இதில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, டில்லி உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் சுதந்திர இந்திய வரலாற்றில் முதன் முறையாக எப்போதும் இல்லாத அளவிற்கு புறக்கணிக்கப்பட்டுள்ளன. இத்தகைய போக்கு "நிதியியலின் பொதுத் தன்மை " சிதைக்கப்பட்டதின் அடையாளம் என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். ஆபத்தான போக்கு!

### எளிய மக்கள் ஏமாற்றம்

ஏழை மற்றும் உழைப்பாளி மக்களின் வாழ்வை மேலும் சீரழிக்கக் கூடிய வகையிலே அத்தியாவசிய பிரிவுகளில் மான்யத் தொகைகள் வெட்டி, சுருக்கி ஒதுக்கப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டிற்கான மான்ய ஒதுக்கீடு ரூ 4,13,466/- கோடி. இவ்வாண்டு 2024-25 இல் ரூ 3,81, 175/- கோடியாக சுருங்கிவிட்டது. உணவு மான்யம் 2023 - 24 ஆம் ஆண்டு ரூ 2,12,332 /- கோடி,2024 - 25 ஆம் ஆண்டு ரூ 2.05 /- லட்சம் கோடி. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ 84,000/- கோடி குறைக்கப்பட்டுள்ளது. ஊரக

வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ 86,000/- கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே ரூ 42,000/- கோடி செலவு செய்யப்பட்டுவிட்டது. இந்த ஆண்டின் எஞ்சிய மாதங்களுக்கு ரூ 44,000/- கோடி மட்டுமே. உண்மையில் இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்திட ரூ 2.00 லட்சம் கோடி ஒதுக்கியிருக்க வேண்டும்.

அதே போல், அங்கன்வாடி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடும் கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டு ரூ 21,527/- கோடி, 2024-25 ரூ 21,200/- கோடி. உரமான்யம், சமையல் எரிவாயு, கல்வித் துறைக்கான மான்யம், பல்கலைக்கழக (UGC) மான்யக் குழுவிற்கான தொகையும் குறைக்கப்பட்டுள்ளதை பார்க்க முடிகிறது.

**கார்ப்பரேட்டுகள் கொண்டாட்டம்**

இந்திய நாட்டின் செல்வ வளங்களை கபளீகரம் செய்து கொண்டும், உழைப்பாளி மக்களின் இரத்தத்தை உறிஞ்சி உழைப்பை திருடும் பெரு முதலாளிகளுக்கும், கார்ப்பரேட் முதலாளிகளுக்கும் மேலும் பல சலுகைகளை தங்கத் தட்டில் வைத்து தாரை வார்க்கப்பட்டிருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளில் ஒன்றிய அரசு பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ரூ 17 லட்சத்து 46 ஆயிரம் கோடி தள்ளுப்படி செய்துள்ளது. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலையில்லா கால நிவாரணத்தை கொடுத்தால் அது நியாயம். ஆனால் புதிதாக வேலைக்கு சேரும் தொழிலாளிக்கு முதல் மாத சம்பளத்துடன் ரூ 15,000/- (மூன்று தவணைகளில்) வழங்குவதை எப்படி புரிந்து கொள்வது....?

**சரி அது போகட்டும் ....**

அந்த தொழிலாளியை வேலைக்கு அமர்த்தும் முதலாளிக்கு ரூ 72,000/- வீதம் தாரை வார்ப்பது சரியா? இந்த அரசின் வர்க்கத்தன்மை அப்பட்டமாக தெரிகிறது. இந்த சலுகை போதுமா? இன்னும் கொஞ்சம்! இது மட்டுமா? இன்னும் இருக்கிறது.

- வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரி 40% லிருந்து 35% ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- ஸ்ட்டார்ட்அப் நிறுவனங்களுக்கான "ஏஞ்சல் வரி" முழுவதும் நீக்கப்பட்டுள்ளது.பாவம், பிழைத்து போகட்டும்! கொழுக்கட்டை தின்ன பிள்ளையாருக்கு குருணி மோர் தட்சிணை. நம் நிலை
- அரசு ஊழியர்,ஆசிரியர் கோரிக்கைகளான பழைய பென்ஷன், நிரந்தர வேலை நியமனம் குறித்து எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை,
- வருமான வரி விலக்கு ரூ 10 லட்சமாக உயர்த்தப்படவில்லை,
- காலிப்பணியிடங்கள் நிரப்புவது, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது குறித்து பட்ஜெட்டில் எதுவுமில்லை,
- தொழிலாளர்கள், விவசாயிகள் முன்னேற்றம் காண இந்த பட்ஜெட்டில் எதுவுமில்லை. எதிர்காலத்தில்...இந்த நிலையில், "தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா"என்ற பட்டுக்கோட்டையாரின் வரிகளுக்கேற்ப நம்முடைய கோரிக்கைகளை வலியுறுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் பாதிக்கப்பட்ட பிற பகுதி உழைப்பாளி மக்களோடு நாம் இணைந்து களம் காணவேண்டியுள்ளது.
- பெருநிறுவனங்களுக்கான வரி விகிதத்தை 30% என்ற பழைய அளவிற்கு கொண்டு வர வேண்டியும்.
- செல்வ வரி, மூதாதையர் சொத்து வரி ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போல் கொண்டு வருதல்.
- பங்கு சந்தை லாபத்தின் மீது வரி விதித்தல்.

உள்ளிட்ட மாற்று திட்ட கோரிக்கைகளோடு வலுவான போராட்டங்களை முன்னெடுப்போம்! மாற்றத்தை நோக்கி முன்னேறுவோம்!

●

கட்டுரை

# ஒன்றிய அரசின் - மக்கள் மீதான தாக்குதல்கள்

**- இரா.மங்களபாண்டியன்**

விலைவாசி உயர்வு பிரச்சனை மக்களைப் பாதித்துள்ள மிகவும் கடுமையான ஒரு பிரச்சனையாகும். ஓட்டுமொத்த பணவீக்கம் (wholesale inflation) தொடர்ந்து 15 விழுக்காடாக வட்டமிட்டுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், சில்லரை பணவீக்கமோ (retail inflation) மீண்டும் 7 விழுக்காட்டைத் தொட்டிருப்பதாக, வெளியாகியுள்ள விவரங்கள் காட்டுகின்றன. விலைவாசி உயர்வுக்கு மிகவும் பங்களிப்பினைச் செய்யக்கூடிய காரணி என்பது, பல்வேறு செஸ் வரிகள் மற்றும் சர்சார்ஜ் வரிகள் மூலமாக பெட்ரோலியப் பொருட்கள் மீது ஒன்றிய அரசாங்கம் விதித்துள்ள உயர் அளவிலான வரிகளால் மிகவும் உயர்ந்துள்ள பெட்ரோல் மற்றும் டீசல் விலைகளாகும். தற்போது ஒன்றிய அரசாங்கம் பெட்ரோல் மீது லிட்டருக்கு 28 ரூபாயும், டீசலுக்கு 22 ரூபாயும் வசூலித்துக் கொண்டிருக்கிறது. இது, சென்ற ஏப்ரலில் பத்து ரூபாய் செஸ் வரியைக் குறைத்தபின் உள்ள நிலையாகும்.

சென்ற நிதியாண்டின்போது ஒன்றிய அரசாங்கம் பெட்ரோலியப் பொருட்களின் மீதான செஸ் வரிகள் மூலமாக நான்கு லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாக வசூலித்தது. இவ்வாறு ஒன்றிய அரசாங்கமானது பெட்ரோலியப் பொருட்களின் மீது வரி விதிப்பதன் மூலமாக வருவாயை உயர்த்துவதற்கு முக்கிய காரணம், அது தான் சேவகம் செய்யும் கார்ப்பரேட்டுகள் மற்றும் பெரும் பணக்காரர்கள் மீது போதுமான அளவிற்கு வரிகளை உயர்த்த மறுப்பதேயாகும். இவ்வாறு ஒன்றிய அரசாங்கம், கார்ப்பரேட்டு ஆதரவு கொள்கையைப் பின்பற்றுவதன் காரணமாக, அதிக வருவாய் வேண்டி, சாமானிய மக்களைக் கசக்கிப்பிழிந்து கொண்டிருக்கிறது.

கடந்த எட்டாண்டுகளில் மோடி அரசாங்கத்தின் மாபெரும் தோல்வி என்பது அது போதுமான அளவிற்கு வேலைவாய்ப்பினை உருவாக்கத் தவறியதாகும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது என்ன சொன்னது தெரியுமா? ஒவ்வோராண்டும் இரண்டு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று உறுதி அளித்தது. கடும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிலும் குறிப்பாக இளைஞர்கள் வேலையின்றி இருப்பது கடுமையாக இருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் (CMIE - Centre for monitoring Indian Economy) அறிக்கையின்படி,20க்கும் 24க்கும் இடைப்பட்ட வயதுள்ள இளைஞர்களின் வேலையின்மை விகிதம் 42 விழுக்காடு அளவிற்கு இருக்கிறது. இது தொடர்பாக உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்பவை, வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பதும், ஒன்றிய அரசாங்கத்தின் கீழ் காலியாகவுள்ள சுமார் 10 லட்சம் வேலைகளை நிரப்பிட வேண்டும் என்பதுமாகும்.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ் வேலை கோரும் ஒவ்வொருவருக்கும் வேலை அளித்திட வேண்டும். இந்த ஆண்டு ஏப்ரலிலிருந்து ஜூலை வரையிலும் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புச்

திட்டத்தின்கீழ் வேலை கோரிய 7 கோடியே 26 லட்சம் பேர்களில் 20 விழுக்காட்டினருக்கு, அதாவது 1 கோடியே 47 லட்வம் பேர்களுக்கு வேலை மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 2021-22 இல் வேலை செய்தவர்களிலும் ஏராளமானவர்களுக்கு அவர்கள் வேலை செய்ததற்கான ஊதியம் இன்னமும் வழங்கப்படாமல் இருக்கிறது. இவற்றை உடனடியாக சரி செய்திட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வேலை நாட்களையும் அதிகரித்திட வேண்டும். ஊதியத்தையும் அதிகரித்திட வேண்டும். அதே சமயத்தில் இது போன்று, தேசிய நகர்ப்புற வேலை வாய்ப்பு உறுதிச்சட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமாகும். இதனை, எவ்வளவு எவ்வளவு விரைவாகச் செய்யமுடியுமோ அவ்வளவு விரைவாக செய்திட வேண்டும்.

மோடி அரசாங்கம், பொதுத்துறை நிறுவனங்களைப் பெரிய அளவில் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. 2014க்குப் பின், ஒன்றிய அரசாங்கம் 3.63 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) விற்றிருக்கிறது. இதனால் ஏராளமானாவர்கள் வேலைகளை இழந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மறுபக்கத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட்டுகள் செல்வ வளம் பெற்றிருக்கிறார்கள். இதனை மேலும் விரிவுபடுத்துவதற்காக ஒன்றிய அரசாங்கம் தேசிய பணமாக்கும் திட்டம் (NMP – National Monetisation Pipeline) ஒன்றையும் உருவாக்கி அதன்மூலம் சுமார் 6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நாட்டின் சொத்துக்களை தனியார் கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. மின்சாரத் திருத்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டுவிட்டால், மின் விநியோகம் தனியார்மயமாகி, மின் கட்டணங்களை கடுமையாக உயர்ந்திடும்.

பொதுத்துறை நிறுவனங்கள் மீது இவ்வாறு தாக்குதல்கள் தொடுக்கப்பட்டிருப்பதுடன், தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகள் மீதான தாக்குதல்களும் சேர்ந்துகொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நான்கு "தொழிலாளர் தொகுப்புச் சட்டங்கள்" (Labour codes) மூலமாக, தொழிலாளர்களை அமர்த்தவும், துரத்தவும்: வேலை நேரத்தை அதிகரித்திடவும் முதலாளிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும் வழிமுறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களை சங்கமாக அணிதிரட்டுவதற்கு ஏராளமான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. நடைமுறையில் இருந்து வந்த தொழிலாளர் நலச் சட்டங்களும், அதன் அமலாக்க எந்திரமும் ஒழித்துக்கட்டப்பட்டிருக்கின்றன.

மூன்று வேளாண் சட்டங்களையும் விலக்கிக் கொள்வதற்கு இட்டுச் சென்ற வரலாறு படைத்திட்ட விவசாயிகள் போராட்டத்திற்குப் பின்னர், பல்வேறு வகையான விவசாய பொருட்களுக்கும், குறைந்த பட்ச ஆதார விலையை சட்டரீதியாக நிர்ணயிப்பதற்கான பிரச்சனையும், விவசாயிகளின் அதிகரித்துக் கொண்டிருக்கும் கடன் பிரச்சனையும் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஊதியங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே இருப்பது நீடிக்கிறது, அதே போன்று அவர்களுக்கு வேலை அளிப்பது என்பது கணிசமான அளவிற்கு குறைந்துகொண்டே செல்கிறது. இந்தப் பிரச்சனைகள் அனைத்துமே மோடி அரசாங்கம் பின்பற்றிவரும் நவீன தாராளமயக் கொள்கைகளின் விளைவுகளேயாகும். மேலும் இது ஜனநாயகத்தின்மீதும், மக்களின் ஜனநாயக உரிமைகள் மீதும் முழு அளவில் தாக்குதலையும் தொடுத்து வருகிறது, முழுமையாக எதேச்சதிகாரமான முறையில் தன்னுடைய வலதுசாரி பொருளாதாரக் கொள்கைகளையும் இந்துத்துவா மதவெறி நிகழ்ச்சிநிரலையும் உந்தித் தள்ளுகிறது.

எவ்விதமான குற்ற உணர்வுமின்றி குடிமக்களின் ஜனநாயக உரிமைகளும், குடிமை உரிமைகளும் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசியல் ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், இதழாளர்கள் முதலானவர்கள் மிகக் கொடூரமான சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச்சட்டம் ("உபா" சட்டம்), மற்றும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ள தேச துரோகக் குற்றப்பிரிவுகளைப் பயன்படுத்தி சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள்.

அமலாக்கத் துறை, மத்தியக் குற்றப் புலனாய்வுக் கழகம், வருமான வரித்துறை போன்ற ஒன்றிய அரசாங்கத்தின் கீழ் உள்ள துறைகளின் மூலமாக எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சிகளின் கீழ் ஆளப்பட்டு வரும் மாநில அரசாங்கங்கள், சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடியினர் மற்றும் பெண்களின் உரிமைகள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. நாடாளுமன்ற நடைமுறையே இழிவு படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரச்சனைகளை எழுப்பி பேச முடியாத நிலை. அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அமைப்புகள் அனைத்தையுமே தங்கள் கட்டளைப்படி செயல்படவைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒன்றிய அரசிற்கு எதிரான விரிவான ஒன்றுபட்ட மேடை வெற்றி பெற வேண்டுமென்றால், அதற்குத் தங்களைப் பாதித்துள்ள பிரச்சனைகளின் மீது பல்வேறு மக்கள் பிரிவினரின் போராட்டங்களில் விரிவான ஒற்றுமை ஏற்பட வேண்டியது அவசியம். பிரச்சனைகள் என்று சொல்கிறபோது அவை மக்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகள் மட்டுமல்ல, ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக விரிவடைந்த ஒன்றுபட்ட மேடைகளை வளர்த்தெடுக்க வேண்டியதும் அவசியம். ●

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## சேலம் மாவட்டம்
# 15 ஆம் மேட்டூர் வட்டக் கிளை மாநாடு




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மேட்டூர் வட்ட கிளை 15 வது வட்டக்கிளை மாநாடு 29.7.2024 திங்கள் மாலை 4:00 மணிக்கு சி. காமராஜ் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானம் எம்.ரமேஷ் குமார் மாவட்ட செயற்குழு உறுப்பினர், வரவேற்புரை சதீஷ் வட்டக்கிளை தலைவர், தொடக்கவுரை பி.சண்முகம் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் வட்டக்கிளை தலைவர்.

வேலை மற்றும் ஸ்தாபன அறிக்கை ஆர்.மீனாட்சி சுந்தரம் வட்டக்கிளை செயலாளர், வரவு செலவு அறிக்கை பி. சதீஷ் வட்ட பொருளாளர், விவாதம், தொகுப்புரை, நிர்வாகிகள் தேர்வு, தீர்மானங்கள் முன்மொழிதல் துணைத் தலைவர்கள் மற்றும் இணைச் செயலாளர்கள் வாழ்த்துரை ஏ.கோவிந்தராஜ் மாவட்ட துணைத் தலைவர் வருவாய்த்துறை அலுவலர் சங்கம். சிறப்புரை து.சிங்கராயன் மாவட்ட இணை செயலாளர், நிறைவுறை பி. சுரேஷ் மாவட்ட செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், நன்றியுரை கோகிலா, இணைச் செயலாளர் 15 ஆவது வட்டக்கிளை மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவர் சி.காமராஜ் துணைத் தலைவர் ஆர்.மீனாட்சி சுந்தரம், கே.என்.வெற்றிவேல் செயலாளர் து சிங்கராயன் இணைச் செயலாளர்கள் கார்த்திகேயன், ராஜா, சண்முகம் மற்றும் கோகிலா. பொருளாளர் சதீஷ். மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரமேஷ் குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ●

# களம் மாறும்! கை மாறும்! புலம் மாறும்! போராட்டம் மாறாது...

**– ச.ஹேமலதா**

*புறப்படு தோழனே!*
*ஒவ்வொரு நாளும்*
*போராட்டம் தான்!*
*களம் மாறும் வாள் வீசும்*
*கை மாறும்! எதிரிகளின்*
*புலம் மாறும் என்றாலும்*
*போராட்டம் மாறாது!*

*- மு.மேத்தா*

ஆதியில் மனிதர்கள் வாழ்வைத் தொடங்கிய போது ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்த்து போராடியே வாழ்வைத் தக்கவைத்துக் கொண்டனர்... விலங்குகளிடமிருந்தும், கொடிய நச்சுப் பூச்சிகளிடமிருந்தும் தங்கள் உயிரைக் காப்பாற்ற போராடினர். அந்தப் போராட்டமே அவர்கள் வாழ்வில் அடுத்தடுத்த நிலைகளுக்கு அவர்களை உயர்த்தியது. நெருப்பை கண்டுபிடித்தும், உருளையைக் கண்டுபிடித்தும் மனித குலம் பெரும் பாய்ச்சலாக முன்னேறியதற்கு அவர்கள் தங்கள் வாழ்க்கையை தகவமைத்துக் கொள்ள போராடியது தானே காரணம்.

நாம் ஒவ்வொருவரும் வாழவே நினைக்கிறோம். வாழ்வதற்காக நடத்தப்படும் போராட்டம் என்பது உயிர் உருவாவதில் தொடங்கி தொடரும் ஒரு செயல். போராட்டம் என்கிற உந்து சக்தி இல்லையெனில் வாழ்வு ஒரு போதும் தொடர்வதில்லை. போராட்டம் என்பது மிக அழகான, ஆழமான ஒரு செயல்பாடு. அந்த வார்த்தையில் உள்ள பொருளும் அது நமக்குத் தருகிற உயிர்ப்பான சிந்தனைகளும் நமது வாழ்வை மேம்படுத்தவும் நம்மை முன்னோக்கிக் கொண்டு செல்லவும் உறுதுணை புரிகின்றன.

வாழ்வின் எந்த கட்டத்திலும் வளர்ச்சியும் போராட்டமும் இயல்பிலேயே பின்னிப் பிணைந்தவை. ஒவ்வொருவரின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் கூட போராட்டம் என்பது தவிர்க்க முடியாதது. சவால்களும் தடைகளும், அதை சரி செய்வதற்கான போராட்டங்களும் இல்லையென்றால் நாம் விஷயங்களை நோக்கிச்சென்று, எதையுமே முயற்சிக்காமல் அப்படியே இருந்து விடுவோம். சவால்களை சமாளித்து, நம் ஒட்டு மொத்த சமூகத்தின் கோரிக்கைகளை வென்றெடுப்பதின் மூலமாகவே நமது வாழ்க்கையில் வளர்ச்சி என்பது ஏற்பட முடியும்.

நம்முடைய அதிகபட்ச செயல்திறன் என்ன என்பதைக் கண்டறிய நாம் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டும். இந்த கடினமான பயணத்தில் நம் மன உறுதி, விடாமுயற்சி அனைத்தும் சோதிக்கப்படுகின்றன. போராட்டங்களை எதிர்கொள்ளும்போது புதிய திறன்களை வளர்த்துக் கொள்ளவும், அறிவைப் பெறவும், மாறுபட்ட சூழ்நிலையில் எப்படி போராட வேண்டும் எனவும் நாம் கற்றுக் கொள்கிறோம். நாம் சந்திக்கும் ஒவ்வொரு போராட்டமும் ஒரு மதிப்புமிக்க அனுபவத்தை நமக்கு கற்றுத் தருகிறது.

**போராட்டத்தை நடத்தி அதிலுள்ள அனுபவத்தின் மூலம் கிடைக்கும் இன்பத்தை உள்வாங்கி மீண்டும் மீண்டும் நான் ஜெயிப்பேன் என்ற உந்துதலோடு நிமிர்ந்து வாழும் வாழ்க்கை அழகு.**

நாம் அரசு ஊழியர்களாக வாழ்கிறோம். அரசு ஊழியர்களாக வாழ்வதிலும், வருங்கால தலைமுறைக்கு அரசுப்பணிக்கான உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதிலும் நமது பங்களிப்பு மிக முக்கியமானது. அந்த வாழ்வின் அர்ப்பணிப்பு மிக்க பணிக்காகவே அரசு ஊழியர் சங்கம் செயல்படுகிறது. சங்கத்தின் செயல்பாடு என்பது எண்ணிக்கையின் பலத்தைப் பொறுத்து அமைந்திருக்கிறது.

எல்லா மாவட்டங்களிலும் உறுப்பினர் சேர்க்கையை சிறப்பாக முன்னெடுத்து செல்லும் போது , சமூகத்திற்கு பயனுள்ள வகையில் நம் செயல்பாடுகளை தொடர முடியும்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் நமது கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் இருக்கும் போது, அவர்களுக்கு நம் எதிர்பார்ப்பை எடுத்துச் சொல்ல நமது உறுப்பினர் எண்ணிக்கை தான் முக்கியமானதாக இருக்கிறது.

நமது சங்கம் 1984 இல் தொடங்கியது முதற்கொண்டு நாம் நமது உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதிலும், நமது செயல்பாடுகளின் மூலமாக நம் சங்கத்தை சிறப்பாக கட்டமைப்பதிலும் முழு முயற்சி எடுத்து தொடர்ந்து வெற்றி கண்டு வருகிறோம். நமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் நிறைவேற்றுவதற்கான போராட்டங்களை முன்னெடுப்பதிலும் நாம் எப்போதும் சளைத்தவர்கள் அல்ல. நம் முன்னே இன்னமும் நமக்கு கனியாத பல கோரிக்கைகள் ஓங்கி வளர்ந்த மலை போல் நிற்கிறது.

அனைவருக்குமான காலமுறை ஊதியம், பழைய பென்ஷன் திட்டம், சாலைப் பணியாளர்களின் 41 மாத கால பணிக்காலம், நிறுத்தி வைக்கப்பட்ட சரண் விடுப்பை மீண்டும் பெறுதல் போன்ற மிக முக்கியமான கோரிக்கைகளை வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். நம்மை போராட்டத்திற்கு இட்டுச் செல்கின்ற இந்த கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு நம் ஒற்றுமையும் நம் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையும் மிகவும் முக்கியம் என்பதை நாம் இந்த தருணத்தில் உணர வேண்டி இருக்கிறது. பேரவைக்கு முன்பாக நமது உறுப்பினர் எண்ணிக்கையை லட்சத்துக்கும் அதிகமாக உயர்த்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

வாழ்வின் நிமித்தமாக நாம் தொடர்ந்து செய்ய வேண்டிய இந்தக் கடமைகளை நிறைவேற்றும் வகையில் ஒவ்வொருவரும் செயல்படுவோம். வெற்றி பெறுவோம். ●

## தமிழ்நாடு மருத்துவ துறை நிர்வாக ஊழியர் சங்க

# பெருந்திரள் முறையீடு



நீதிமன்ற வழக்கு காரணமாக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக அலுவலக கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்கப்படாத காரணத்தினால் 500க்கும் மேற்பட்ட காலியாக பணியிடங்களை உடனடியாக நிரப்பிட கோரியும் அதற்கு முன்னதாக பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்திட வலியுறுத்தியும் தமிழ்நாடு மருத்துவ துறை நிர்வாக ஊழியர் சங்கம் சார்பாக மூன்று கட்ட இயக்கங்கள் வடிவமைக்கப்பட்டது.

முதல் கட்ட இயக்கமாக மாநிலம் முழுவதும் அனைத்து நிர்வாக ஊழியர்களும் கோரிக்கை அட்டை அணிந்து பணிபுரிவது. இரண்டாவது கட்ட இயக்கமாக தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் நலப் பணிகள் இணை இயக்குனர் அலுவலகங்கள் அனைத்து இயக்கங்கள் முன்பாக கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மூன்றாவது கட்ட ஏக்கமாக ஒன்று எட்டு 20 24 அன்று சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் மருத்துவத்துறை இயக்குனரிடம் பெருந்திரள் கோரிக்கை முறையீடு இயக்கம் நடைபெற்றது. தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து 400க்கும் மேற்பட்ட நிர்வாக ஊழியர்கள் பங்கேற்றனர் போலீஸார் அடக்கு முறையும் மீறி பெருந்திரள் முறையீடு இயக்கம் மிக எழுச்சியுடன் நடைபெற்றது. மாநிலத் தலைவர் எம்பி விவேகானந்தன் தலைமை உரையாற்றினார் பொதுச் செயலாளர் இரா. ந. நம்பிராஜன் கோரிக்கை விளக்க உரையாற்றினார். மருத்துவத்துறை கூட்டமைப்பை சார்ந்த அனைத்து மாநில நிர்வாகிகள், நிர்வாக ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில நிர்வாகிகள், அனைத்து தோழமைச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சா. டானியல் ஜெய சிங் நிறைவுறையாற்றினார். ●

# ஒன்றிய பட்ஜெட் 2024
# கண்டன ஆர்ப்பாட்டம்

**வடசென்னை**

24 ஆம் தேதி நடைபெற்ற ஆர்ப்பாட்ட விவரங்கள் வட சென்னை மாவட்டத்தில் குறளகம் பகுதிக்கு உட்பட்ட வணிகவரித்துறை அலுவலக வளாகத்திலும் தங்க சாலை பகுதிக்கு உட்பட்ட மின்ட் ஐடிஐ வளாகத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது தங்க சாலை பகுதி குழு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பகுதி குழு தலைவர் மோகன்தாஸ் தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் அந்தோணி சாமியும் மாநில தலைவர் பொறுப்பு டேனியல் ஜெய் சிங் அவர்களும் கண்டன உரையாற்றினார்கள் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி தொழிற்பயிச்சி அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ரமேஷ் பேசினார்கள் இறுதியாக தங்கசாலை பகுதியினுடைய செயலாளர் தாமோதரன் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது வணிகவரி வளாகத்தில் குறளகம்பகுதி செயலாளர் முருகன் தலைமை தாங்க மாவட்ட தலைவர் விஜயகுமாரன் மாவட்ட இணைச்செயலாளர் மகேந்திரன் மாவட்டதுணை தலைவர் விவேகானந்தன் மற்றும் பகுதி நிர்வாகிகள் ஆலுவளக கிளை நிர்வாகிகள் பங்கேற்னர். மொத்தம் 146 பேர் பெண்கள் 46 பேர்

**திருச்சி**

ஒன்றிய அரசின் மக்கள் விரோத அரசு ஊழியர்களை வஞ்சிக்கும் நிதிநிலை அறிக்கையை கண்டித்து 24.07.2024 புதன்கிழமை மாநிலம் முழுவதும் வட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் ஒன்றிய நிதியமைச்சர் 2024-25 ஆண்டுக்கான தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்வைத்த கோரிக்கைகள் எதுவும் இந்த பட்ஜெட்டில் இடம் பெறவில்லை குறிப்பாக சமூக பாதுகாப்பாக இருக்கக்கூடிய புதிய பென்ஷன் திட்டம் ரத்து மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவது, வருமான வரி உச்சவரம்பு 10 லட்சமாக உயர்த்துவது, ஒப்பந்த பணி நியமனம் ரத்து புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க பட்ஜெட்டில் அறிவிப்பு இல்லை. எட்டாவது ஊதியக்குழு அமைக்காதது மேலும், மத்திய அரசு பட்ஜெட்டில் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முற்றிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட்டில் ஊழியர்களுக்கு எதிரான அணுகுமுறைக்கும் மக்கள் விரோத கொள்கைகளை தொடர்ந்து கடைபிடிக்கும் ஒன்றிய அரசுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் நடத்திடுமாறு அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்தது.

அதன் அடிப்படையில் 24.07.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருச்சிராப்பள்ளி 1 வட்டக்கிளை சார்பில் ஒன்றிய நிதி நிலை அறிக்கை கண்டித்து வட்டக்கிளை தலைவர் தோழர் சுரேஷ் பிரபு தலைமையில் ஆர்ப்பாட்டம் இணை இயக்குநர் மருத்துவப் பணிகள் அலுவலகம் முன்பு நடைபெற்றது. அரசு தொழிற்பயிற்சி ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் நவநீதன், மாவட்ட தலைவர் தோழர் பால் பாண்டி கண்டன உரையாற்றினார்கள்.

திருச்சிராப்பள்ளி 2 வது வட்டக்கிளை சார்பில் மணிகண்டம் ஊராட்சி ஒன்றிய

அலுவலகத்தில் ஆர்பாட்டம் வட்டக்கிளை நிர்வாகிகள் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் தோழர் பெரியசாமி கண்டன உரையாற்றினார்.

திருச்சிராப்பள்ளி 2 வது வட்டக்கிளை சார்பில் மன்னார்புரம் பல்துறை கட்டட வளாகத்தில் அலுவலகத்தில் ஆர்பாட்டம். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் அமுதவல்லியும், மணப்பாறை வட்டக்கிளை சார்பில் வட்டக்கிளை செயலாளர் தோழர் சுந்தர்ராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் தோழர் அல்போன்ஸ் கண்டன உரையாற்றினார்கள்.

திருவெறும்பூர் வட்டக்கிளை சார்பில் வட்டக்கிளை தலைவர் தோழர் சந்திரா தலைமையிலும், முசிறி வட்டக்கிளை சார்பில் தா. பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டக்கிளை செயலாளர் தோழர் அமுதா தலைமையிலும், தொட்டியம் வட்டக்கிளை சார்பில் வட்டக்கிளை துணைத் தலைவர் தோழர் ஜெயக்கொடி தலைமையிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டத்தில் அனைத்து துறை ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

**திண்டுக்கல்**

மத்திய அரசின் பட்ஜெட்டை கண்டித்து அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அரைகூவலின் படி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநிலம் முழுவதும் அனைத்து வட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற முடிவின் படி இன்று 25/7/2024 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் வட்டக் கிளைச் செயலாளர் ராஜாமணி தலைமை தாங்கினார் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட இணை செயலாளர் துரைராஜ் பேசினார் அகில இந்திய காப்பீட்டு கழக ஊழியர் சங்கத்தின் கோட்ட துணைத் தலைவர் வாஞ்சிநாதன் மத்திய பட்ஜெட் குறித்த விளக்க உரையாற்றினார் மாவட்ட தலைவர் முபாரக் அலி சிறப்புரையாற்றினார் இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசு பழைய பென்ஷன் திட்டத்தை வழங்க வேண்டும் அடுத்த ஊதிய குழுவை உடனடியாக வெளியிட வேண்டும் அனைத்து மாநிலங்களுக்கும் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலம் என்ற பாகுபாடு காட்டக்கூடாது என்பன போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன

நத்தம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட செயலாளர் சுகந்தி சிறப்பு உரையாற்றினார் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட இணை செயலாளர் மகாராஜா சிறப்புரையாற்றினார் பழனியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாநில துணைத்தலைவர் மங்களபாண்டியன் சிறப்புரையாற்றினார்

**மதுரை**

ஒன்றிய அரசின் வஞ்சிக்கப்பட்ட ஊழியர் விரோத மக்கள் விரோத நிதிநிலை அறிக்கையைக் கண்டித்து மதுரை மாவட்டத்தில் வட்டத்தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை நகரில் வனத்துறை அலுவலகம், பொதுப்பணித்துறை அலுவலகம், மதுரை மருத்துவக்கல்லூரி அலுவலகம், மாவட்டக்கருவூலம், சம்பளக்கணக்கு அலுவலகம், கூட்டுறவு இணைப்பதிவாளர் அலுவலகம். மதுரை புறநகரில் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுச்செயலாளர் ஆ.செல்வம் மாநிலத்துணைத்தலைவர் மொ.ஞானத்தம்பி மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி மாவட்டச்செயலாளர் க.நீதிராஜா

மாவட்டத்துணைத் தலைவர் த.மனோகரன் மாவட்ட இணைச்செயலாளர்கள் சி.பெரியகருப்பன் சு.பாண்டிச்செல்வி வட்டக்கிளை நிர்வாகிகள் இரா.தமிழ் ஜெ.சிவகுரும்பன் கூ.முத்துவேல் அனுசுயா சீதை சாலை ரவீந்திரன் மு.பஞ்சவர்ணம் பிரேமலதா மகுடீஸ்வரன் சி.இந்திராணி மா.ஆசை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி**

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் அறைக்கூவலுக்கிணங்க, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், மாநில மைய முடிவின்படி மத்திய அரசின் பட்ஜெட்டை கண்டித்து மாநிலம் முழுவதும் அனைத்து வட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நான்கு வட்ட கிளைகளில் மிக எழுச்சியுடன் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஊத்தங்கரை, சூளகிரி, ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய நான்கு வட்டக் கிளைகளிலும் மிக எழுச்சியுடன் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரியில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கிருஷ்ணகிரி வட்டத் தலைவர் தோழர் G.வெங்கடேசன் அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் தோழர். சி.கல்யாணசுந்தரம் அவர்கள் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். துறைவாரி சங்க தலைவர்கள் கண்டன உரை வழங்கி சிறப்பித்தனர். தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கம், மாவட்ட தலைவர் தோழர் பி.சந்திரன் அவர்கள் நிறைவுறையாற்றினார். இறுதியாக கிருஷ்ணகிரி வட்ட பொருளாளர் தோழர். M.செல்வகுமார் அவர்கள் நன்றி கூறி கண்டன ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.

**அரியலூர்**

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கைகளான பழைய ஓய்வூதியம், காலிப் பணியிடங்களை நிரப்புதல், ரூபாய் 10 லட்சம் வரை வருமானவரி விலக்கு உள்ளிட்டவற்றின் மீது எவ்வித அறிவிப்பும் இல்லாததைக் கண்டித்து இன்று 25-07-2024 அரியலூர் மாவட்டம் செயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மதியம் 1.30 மணிக்கு உணவு இடை வேலையில் மாவட்டத்தலைவர் தோழர் என். வேல்முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் தோழர் சந்தானம், MRP செவிலியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் ராகவன் உள்ளிட்டப்பலர் கலந்து கொண்டனர்.

**தென்காசி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின் படி இன்று தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்கள் வஞ்சிக்கப்பட்டதனை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 10 இலட்சம் வருமான வரி உச்சவரம்பு, ஓய்வூதியம் மற்றும் காலிப்பணியிடங்களை நிரப்பிடுவது குறித்து எந்த ஒரு அம்சமும் மத்திய அரசின் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சிவகிரி வட்டக்கிளை தலைவர் கணேசன் தலைமை தாங்கினார்.

வட்டாட்சியர் மைதீன் பட்டாணி, நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் கண்டனவுரையாற்றினர். சிவகிரி ஓய்வு பெற்ற அலுவலர் சங்க வட்டத் தலைவர் வைரவன் மற்றும் கிளை செயலாளர் சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணிகண்டன் நன்றியுரை வழங்கினார். ஆர்ப்பாரட்டத்தில் வட்டக்கிளை உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

●

# தோழர் ஆர்.எம்.எஸ் நினைவஞ்சலி கூட்டம்

**திருச்சி**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட அலுவலகமான தோழர் எம்ஆர் அப்பன் இல்லத்தில் மேனாள் பொதுச் செயலாளர் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் மேனாள் தலைவர் தோழர் ஆர் முத்து சுந்தரம் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் மாநில துணைத் தலைவர் தோழர் பெரியசாமி, மாவட்டத் தலைவர் தோழர் பால் பாண்டி, தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் பிரேம்குமார் மாவட்ட துணைத் தலைவர் தோழர் வெங்கடேசன், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் செந்தமிழ் செல்வன், மாவட்ட செயலாளர் தோழர் மதிவாணன், வட்டக்கிளை நிர்வாகிகள், வளாக கிளை நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

**மயிலாடுதுறை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மேனாள் பொதுச் செயலாளர் தோழர் RMS நினைவுதின கருத்தரங்கம் 27.07.2024 அன்று காலை மயிலாடுதுறை TNROA சங்க கட்டடத்தில் மாவட்டத் தலைவர் தோழர் R.சிவபழனி தலைமையில் சங்க கொடியேற்றத்துடன் தொடங்கி



நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் வரவேற்புரையாற்றினார். மாநிலப் பொருளாளர் தோழர் M.பாஸ்கரன் அவர்களும், மாநிலச் செயலாளர் தோழர் S.கோதண்டபாணி அவர்களும் கருத்துரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் தோழர் R.கலா நன்றி கூறினார்.

**ஈரோடு**




தோழர் ஆர்.எம்.எஸ் நினைவேந்தல் நிகழ்வு மாவட்டத் தலைவர் தோழர் அ.ராக்கிமுத்து தலைமையில் 29.07.2024 திங்கள் மாலை 6.00 மணிக்கு ஈரோடு TNGEA சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மேனாள் / இந்நாள் சங்க நிர்வாகிகள் பங்கேற்று தோழர் ஆர். எம்.எஸ் இன் நினைவுகளை நினைவு கூர்ந்தனர். ●

# தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம்
# மாநில நிர்வாகிகள் தேர்தல்

தமிழ்நாடு அரசு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, பயிற்சிப்பிரிவில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம். இச்சங்க சட்டவிதிகளின்படி ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களைப்போல மாநில செயற்குழுவில் மாநில தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்படுகிறது. மாநில நிர்வாகிகள் தேர்தலில் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு, தமிழகம் முழுவதும் 102 ஐடிஐகளில் துணை தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு வாக்குச்சீட்டு முறையில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் நடத்தப்பட்டு மாநில நிர்வாகிகள் தேர்வு செய்யப்படும் நடைமுறை இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 1966 முதல் பின்பற்றப்பட்டுவருகிறது. அதன்படி மாநில நிர்வாகிகள் தேர்தல் 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான மாநில நிர்வாகிகள் தேர்தல் சம்பந்தமாக மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் மூலமாக தமிழக அரசு, துறைச்செயலாளர், துறை ஆணையர், கூடுதல் இயக்குனர் உள்ளிட்ட அரசு அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் அனைத்து ஐடிஐ முதல்வர்கள் மற்றும் துணை இயக்குநர்களுக்கும் இத்தேர்தல் தொடர்பான அனைத்து நடைமுறைகளும் முறையாக உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்பட்டு இன்று அனைத்து ஐடிஐகளில் 04.07.2024 அன்று தேர்தல் நடைபெற்றது.. அதில் ஜனநாயக அணியின் சார்பாக தோழர்.மு.சீனிவாசன் தலைமையில் போட்டியிட்ட அணியினர் அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர்.

**2024-2025 ஆண்டிற்கான மாநில நிர்வாகிகள்**

மாநிலத்தலைவர்: M.சீனிவாசன், துணைத்தலைவர்: P.நடராஜன், துணைத்தலைவர் (நகரம்) : R.அமரேசன், நெல்லை மண்டல செயலாளர்: T.சேகர், பொதுச்செயலாளர்: N.ரமேஷ், செயலாளர்: C.அஜெய்ராஜ், அமைப்புச்செயலாளர்: K.கார்த்திகேயன், மதுரை மண்டல செயலாளர்: K.முத்துவேல், பொருளாளர்: N.திருநாவுக்கரசு அதனடிப்படையில் வெற்றிபெற்ற மேற்கண்ட மாநில நிர்வாகிகளுக்கு 15.07.2024 அன்று சென்னை வடசென்னை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாநில் தேர்தல் ஆணையர் தோழர்.K.மோகன்தாஸ் அவர்கள் பதவி பிரமானம் செய்துவைத்தார்.

மேற்கண்ட பதவி ஏற்பு விழாவில் திரு.N.சுப்பிரமணியன் முதல்வர், திரு.T.ராதாகிருஷ்ணன் துணை இயக்குனர், திருமதி.ஜெயந்தி நிர்வாக அலுவலர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொறுப்பு தலைவர் தோழர்.சா.டானியல்ஜெயசிங், வடசென்னை மாவட்டசெயலாளர் தோழர் M.அந்தோணிசாமி, மாவட்ட தலைவர் தோழர். விஜயகுமரன், தோழர்.பஞ்சம், வேட்பாளர்களாக போட்டியிட்ட தோழர்.S.பலராமன், தோழர். தர்மலிங்கம், மற்றும் தமிழகம் முழுவதிலுமிருந்து கிளைத்தலைவர்கள், கிளைச்செயலாளர்கள், முன்னனி ஊழியர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

மாநிலத்தலைவர் தமது உரையில் தமிழக அரசும், துறை நிர்வாகமும் பிரதான கோரிக்கைகளான பணிமனை உதவியாளர்கள் முதல் முதல்வர் வரையான அனைத்து காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும், சான்றிதழ்தாரர்களுக்கு முதல்வர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணிபுரிந்துவரும் PPP & COE பயிற்றுனர்கள் மற்றும் அலுவலர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும். நிறைவேற்றிட வேண்டும். துறை தனியார்மயமாக்கப்படுவதை தமிழக அரசு கைவிடவேண்டும். என கோரிக்கை வைத்தார். கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்க நடவடிக்கைகளை திட்டமிடவேண்டியுள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து போராடி கோரிக்கைகளை வென்றெடுப்போம் என அறைகூவல் விடுத்தார். ●

# தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

# 50 ஆம் ஆண்டு பொன்விழா சிறப்பு பேரவை

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் பழங்குடியினர் 50ம் ஆண்டு பொன்விழா சிறப்பு பேரவை மற்றும் பொதுக்குழுக் கூட்டம் கடந்த 17.07.2024 அன்று செங்கல்பட்டில் நடைபெற்றது. இப்பொன்விழா பேரவையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொறுப்பு மாநில தலைவர் தோழர் சா.டானியல் ஜெயசிங் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு மறுவாழ்வுத்துறை ஊழியர் சங்க மாநில தலைவர் தோழர் புகழேந்தி நிறைவுரை ஆற்றினார். மேலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் முகமதுஉசேன், கருவூல கணக்குத்துறை அலுவலர் சங்க பொது செயலாளர் தோழர் லெனின், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சங்க மாநில துணைத்தலைவர் தோழர் ஆனந்த், நகராட்சி நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் தாமோதரன் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்பு பொதுக்குழுவில் சங்கத்தின் ஸ்தாபகர்கள் தோழர் சம்பந்தமூர்த்தி, தோழர் பாலகிருஷ்ணன் மற்றும் முன்னாள் மாநில நிர்வாகிகள், துறை சார்ந்த துணை ஆட்சியர்கள் சிறப்புரை ஆற்றினர். மேலும் இப்பொதுக்குழுவில் மாநில தலைவராக திரு மு.சிவக்குமார், பொதுச்செயலாளராக திரு R.M.வாஞ்சிநாதன், மாநில பொருளாளராக திரு ம.இளவரசன், மாநில அமைப்பு செயலாளராக திரு பா.உமாசங்கர், மாநில இணை பொதுசெயலாளராக திருமதி பா.பல்லவி, மாநில மகளிர் அமைப்பாளராக திருமதி மா.செல்வபாரதி, மாநில துணைத் தலைவர்களாக திரு ஜே.வி. அருள்டேனியேல் திருமதி R.உமாகல்யாணி, திரு ஆ.கஅசோக்குமார், திருமதி க.பாக்கியலட்சுமி, திரு கோ.செந்தில்செல்வன், திரு S.நாகராஜன், திருமதி மா.அமுதா, மாநில இணை செயலாளர்களாக திருமதி C. லோகேஸ்வரி, திருமதி பா.சுஜாதா, திருமதி ரா.அமுதா, திரு பா.பார்புகழோன், திரு கு.கணேஷ், திரு க.ஆனந்தகுமார், திரு தணிக்கையாளர்களாக திரு ப.கலையரசன், மாநில ஆ.முத்துவழிவிட்டான், திரு M.ஆண்டனிநேசன் ஆகியோர்களும் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்களும் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# 2024 ஒன்றிய பட்ஜெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்



செங்கல்பட்டு




திருவண்ணாமலை



தென்சென்னை



திண்டுக்கல்




தர்மபுரி



திருவள்ளூர்



மயிலாடுதுறை




ஈரோடு



தென்காசி




நாகப்பட்டினம்



கோவை




சேலம்

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.08.2024




தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்க 16 ஆம் மாநில மாநாடு



தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்க பொன்விழா சிறப்பு பேரவை

## 2024 ஒன்றிய பட்ஜெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்



கரூர்



திருவாரூர்



அரியலூர்




காஞ்சிபுரம்



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com